# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN



**இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம்
சகல நாட்களிலும்
நான் உங்களுடனே கூட இருக்கிறேன்**

மத்தேயு 28:20

TAMILNADU ASSEMBLIES OF GOD NEWS MAGAZINE

January - February 2019
Volume : 59

ஆண்டு சந்தா ₹ 100/-
Issue : 1

## ஆலய பிரதிஷ்டை, முடுவார்பட்டி, மதுரை மேற்கு மண்டலம்









## போதகர்கள் துணையினர் முகாம், ஆணைக்கட்டி





## தென் சென்னை மண்டல ஆண்கள் முகாம்










## ஆசிரியரிடமிருந்து........!



பரிபூரண ஜீவன் வாசகர்கள் அனைவருக்கும் இயேசுவின் இணையற்ற நாமத்தில் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்! கடந்த ஆண்டு முழுவதும் கர்த்தர் நம்மை அதிசயமாக நடத்தி வந்தார். இந்த புதிய ஆண்டிலும் அவர் நமக்கு இன்னும் அதிகமான கிருபைகளையும், பெலனையும் தந்து நம்மை ஆசீர்வதிப்பாராக! நம்முடைய பரிபூரண ஜீவன் பத்திரிக்கையை ஜெபத்தினாலும், பொருளாதாரத்தினாலும் தொடர்ந்து தாங்கிவரும் தேவ ஊழியர்கள், விசுவாசிகள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்கிறேன். தேவன்தாமே உங்களையும், உங்கள் குடும்பம் மற்றும் ஊழியங்களையும் எல்லா விதத்திலும் இந்த ஆண்டு ஆசீர்வதித்து மேன்மைப்படுத்துவராக.

அன்பானவர்களே! இந்த புதிய ஆண்டில் ஜெபத்திலும், கர்த்தரை அறிகிற அறிவிலும் வளர நல்ல தீர்மானங்களை எடுங்கள். தேவனுக்கு பிரியமான வாழ்க்கை வாழுங்கள். ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்தவராக இல்லாதபடி, அனுதினமும் தேவனோடு நெருங்கி வாழ தீர்மானியுங்கள். சபை ஊழியங்களில் கடந்த ஆண்டை காட்டிலும் இன்னும் உற்சாகமாக பங்கு பெறுங்கள். தினமும் ஒருவருக்காவது சுவிசேஷம் அறிவிக்க பிரயாசப்படுங்கள். முதலாவது தேவ ராஜ்யத்தையும் நீதியையும் தேடுங்கள். அப்பொழுது உங்கள் தேவைகள் அனைத்தையும் இந்த ஆண்டு கர்த்தர் அற்புதமாக சந்திப்பதை காண்பீர்கள்!

நமது தேசத்தில் நடைபெறப்போகும் பாராளுமன்ற தேர்தலுக்காக ஊக்கமாக ஜெபிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். நம் தேசத்தில் மதசார்பற்ற நல்ல ஆட்சி அமையவும், நல்ல தலைவர்கள் எழும்பவும், 543 தொகுதிகளிலும் தேவ சித்தம் செய்யப்படவும் பாரத்தோடு ஜெபிப்போம். கடந்த மாதம் நடைபெற்ற 5 மாநில சட்டசபை தேர்தல்களில் தேவன் நம் ஜெபங்களைக் கேட்டு நல்ல மாற்றங்களைத் தந்துள்ளார். அவருக்கே மகிமை உண்டாகட்டும். நாம் ஒன்றுபட்டு தொடர்ந்து ஜெபிக்கும்போது வரப்போகும் தேர்தலிலும் தேவன் தமது வல்லமையை விளங்கப்பண்ணுவார். தேவனால் கூடாதகாரியம் ஒன்றுமில்லை (லூக்கா 1:37).

மேலும் நமது ஸ்தாபன தலைவர்கள், போதகர்கள், ஊழியங்களுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள்.

**சமாதானத்தின் கர்த்தர்தாமே எப்பொழுதும் சகல விதத்திலும் உங்களுக்குச் சமாதானத்தைத் தந்தருளுவாராக. கர்த்தர் உங்களனைவரோடுங்கூட இருப்பாராக** (2 தெச. 3:16). ஆமென்.

## ஆசிரியரின் செய்தி.....

# நான் உங்களோடு இருக்கிறேன்!

'...சகல நாட்களிலும் நான் உங்களுடனே இருக்கிறேன்.' மத்தேயு 28:20

இந்தப் புதிய ஆண்டில் தேவன் தம்முடைய பிரசன்னத்தை நம் அனைவருக்கும் வாக்குப்பண்ணுகிறார். இந்த உலகத்தில் அவருடைய பிரசன்னம்தான் எல்லாவற்றையும் விட மிகவும் அவசியம். 'நான் உன்னோடு கூட இருக்கிறேன்' என்ற வாக்கு மத்தேயு சுவிசேஷத்தின் ஆரம்பத்திலும், மத்தியிலும், இறுதியிலும் காணப்படுகிறது. சுவிசேஷத்தின் ஆரம்பத்தில் இயேசுவுக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள். இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தம் என்று வாசிக்கிறோம் (மத்தேயு 1:23). சுவிசேஷத்தின் மத்தியில், இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்று இயேசு கூறுகிறார் (மத்தேயு 18:20). சுவிசேஷத்தின் இறுதியில் இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி, 'இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் ' என்று கூறி தம்முடைய மாறாத பிரசன்னத்தை வாக்குப்பண்ணியிருக்கிறார். தேவப் பிரசன்னம் நம்முடைய வாழ்வில் இருக்கும்போது பல ஆசீர்வாதங்களை நாம் பெற முடியும்.

### 1. சமாதானம் - PEACE

தேவன் நம்மோடு இருக்கும்போது, நமக்கு இளைப்பாறுதலும் சமாதானமும் உண்டாகும். 'என் சமூகம் உனக்கு முன்பாகச் செல்லும், நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன்' என்று கர்த்தர் சொல்லுகிறார் (யாத்திராகமம் 33:17). இயேசு உங்கள் குழப்பங்கள், கலக்கங்கள், பயங்கள் யாவையும் நீக்கி தெய்வீக அமைதியை உங்கள் வாழ்வில் கட்டளையிடுவார். பயந்திருந்த சீஷர்கள் நடுவே வந்து இயேசு நின்று, 'உங்களுக்கு சமாதானம்' என்றார் (யோவான் 20:19). இயேசு சீஷர்களோடு படகில் கூட இருந்தபோது கொந்தளிப்பு அமர்ந்து அமைதல் உண்டாயிற்று (மாற்கு 4:36-41). வெளியில் கடினமான உஷ்ணம் இருந்தாலும் ஏ.சி. அறையில் நாம் இருக்கும்போது நமக்குக் குளிர்ச்சி உண்டாவது போல நம்மைச் சுற்றிலும் போராட்டங்கள் இருந்தாலும் தேவன் நம்மோடு இருக்கும்போது நமக்கு உள்ளான சமாதானமும் மகிழ்ச்சியும் உண்டாகும்.

### 2. பாதுகாப்பு - PROTECTION

தேவப் பிரசன்னம் நமக்குப் பாதுகாப்பை அளிக்கிறது. 'நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன்' (ஏசாயா 43:2) என்று கர்த்தர் சொல்லுகிறார். தேவப் பிரசன்னம் நம்மைச் சுற்றிலும் அக்கினி மதிலாக இருந்து நம்மைப் பாதுகாக்கும் (சகரியா 2:5). தேவன் நம்மோடிருக்கும்போது அக்கினியும் வெள்ளங்களும் நம்மைச் சேதப்படுத்தாது (தானியேல் 3:25). நான் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன். தேவரீர் என்னோடு கூட இருக்கிறீர் என்று தாவீது கூறுகிறார் (சங்கீதம் 23:4). தேவன் நம்மோடு இருக்கும்போது ஒருவனும் நமக்கு விரோதமாக எதிர்த்து நிற்பதில்லை (யோசுவா 1:5; ரோமர் 8:31). நாம் அவரை நேசித்துக் கீழ்ப்படிந்து அவரோடு நெருங்கி வாழத் தீர்மானிக்கும்போது, அவர் நம்மைக் காக்கும்படி நம்முடனே இருப்பேன் என்று வாக்குப்பண்ணியிருக்கிறார் (எரேமியா 1:8,19; 15:20; சங்கீதம் 91:11).

### 3. ஆசீர்வாதமும் விருத்தியும் - PROSPERITY

தேவப் பிரசன்னம் நமக்கு ஆசீர்வாதத்தையும் விருத்தியையும் கொண்டு வரும். கர்த்தர் யோசேப்போடே கூட இருந்து அவனை ஆசீர்வதித்து அவனுடைய காரியங்களை வாய்க்கப்பண்ணினார் என்று வேதம் கூறுகிறது (ஆதியாகமம் 39:2, 23). கர்த்தர் தாவீதோடே இருந்தார். அவன் நாளுக்கு நாள் விருத்தியடைந்தான்

(2சாமுவேல் 5:10) என வாசிக்கிறோம். கர்த்தர் யோசபாத்தோடிருந்தார். அவனுக்கு ஐசுவரியமும் கனமும் மிகுதியாயிருந்தது (2நாளாகமம் 17:3,5). கர்த்தர் எசேக்கியாவோடிருந்தார். அவன் போகிற இடம் எங்கும் அவனுக்கு அநுகூலமாயிற்று (2இராஜாக்கள் 18:7).கர்த்தர் இவ்வருடம் உங்களோடிருந்து உங்கள் கைகளின் பிரயாசத்தை ஆசீர்வதிப்பார். உங்கள் தொழிலை விருத்தியடையச் செய்வார். அவருடைய சமூகத்தை நித்தமும் தேடுங்கள். அவருடைய ஆலோசனையைக் கேட்டுக் காரியங்களைச் செய்யுங்கள். வேத வசனத்தைத் தினந்தோறும் வாசித்து அவருடைய சத்தத்தைக் கேளுங்கள்.அப்பொழுது நீங்கள் செய்வதெல்லாம் வாய்க்கும் (சங்கீதம் 1:3).

## 4. ஜனங்களின் தயவு - PEOPLE'S FAVOUR

ஆசா ராஜாவைக் குறித்து, 'அவனுடைய தேவனாகிய கர்த்தர் அவனோடிருக்கிறதைக் கண்டு இஸ்ரவேலிலிருந்து திரளான ஜனங்கள் அவன் பட்சத்தில் சேர்ந்தார்கள்' என வேதம் கூறுகிறது (2 நாளாகமம் 15:9). தேவன் நம்மோடிருக்கும்போது அவர் நமக்கு ஜனங்களையும் அவர்களது உதவியையும் கட்டளையிடுகிறார். ஆசா தேவனை முழு இருதயத்தோடு தேடினான். தேவனுக்குப் பிரியமில்லாத அருவருப்பான காரியங்களை அகற்றினான் (2 நாளாகமம் 14:3,4). நாமும் அப்படிச் செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். மேலும் கர்த்தர் யோசேப்போடே இருந்தபடியால் அவனுக்கு அவனுடைய தகப்பனார் போத்திபார் மற்றும் பார்வோன், சிறைச்சாலை தலைவன் கண்களில் தயவு கிடைக்கப் பண்ணினார் (ஆதியாகமம் 37:3;39:4,23;41:42). தேவன் நம்மோடிருக்கும்போது ஜனங்கள் நமது பட்சத்தில் வருவார்கள்!

## 5. வல்லமை - POWER

தேவன் அவருடனே கூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தார் என்று வேதம் இயேசுவைக் குறித்து கூறுகிறது (அப்போஸ்தலர் 10:38). தேவப் பிரசன்னம் தேவ வல்லமையை நமது வாழ்வில் கொண்டு வருகிறது. கர்த்தர் அவர்களுடனே கூடக் கிரியை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களால் வசனத்தை உறுதிப்படுத்தினார் என்று ஆதி அப்போஸ்தலர்களைக் குறித்து வாசிக்கிறோம் (மாற்கு 16:20). மத்தேயு 28:20-ல் நாம் இயேசுவின் பிரதான கட்டளையை நிறைவேற்ற புறப்படும்போது அவருடைய பிரசன்னத்தையும் வல்லமையையும் நமக்குத் தருவேன் என்று தேவன் வாக்குப்பண்ணுகிறார். சுவிசேஷத்தை அறிவிப்பது நம் அனைவர் மேலும் விழுந்த கடமை. ஆகவே, இந்த வருடம் இயேசுவை அறியாத மக்களுக்குச் சுவிசேஷம் அறிவிப்போம். சபைக்கு அழைத்து வருவோம். பிசாசின் வல்லமையில் அகப்பட்ட மக்களை விடுவிப்போம்! வியாதிகளைச் சுகமாக்குவோம்! தேவன் நம்மோடிருக்கிறார்!

அருமையானவர்களே, இவ்வருடம் முழுவதும் தேவனுடைய வழியில் நடந்து, தேவப் பிரசன்னத்தை நமக்குச் சொந்தமாக்கிக் கொண்டு அதின் மூலம் வரும் ஆசீர்வாதங்களைச் சுதந்தரிப்போம்! தேவப் பிரசன்னத்தை இழக்கச் செய்யும் அனைத்துக் காரியங்களையும் உங்களை விட்டு அகற்றுங்கள். பாவம், கீழ்ப்படியாமை, முறுமுறுப்பு, புறங்கூறுதல் ஆகியவை தேவப் பிரசன்னத்தை இழக்கச் செய்யும் (நியாயாதிபதிகள் 16:20; 1 சாமுவேல் 16:14; எண்ணாகமம் 12:9). இவைகளைக் களைந்து போடுங்கள். கர்த்தர் உங்களைத் தம்முடைய பிரசன்னத்தினால் நிறைத்து உங்களையும், உங்கள் குடும்பத்தையும், உங்கள் வேலையையும், ஊழியங்களையும் மேன்மேலும் ஆசீர்வதிப்பாராக!

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மூத்த போதகர், சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச், திருச்சி



# ஆதி சபையிலிருந்து கற்றுக்கொள்வோம்

Rev. P.S. ராஜமணி
இயக்குநர் - அகில இந்திய விஷன் 2020

## பரிசுத்த ஆவியின் அபிஷேகம் நிறைந்த சபையாக இருந்தது

### அன்று அனைவரும் பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெற்றிருந்தனர்

யூதர்களின் பண்டிகை நாளான பெந்தெகொஸ்தே அன்று எருசலேமில் கூடியிருந்த இயேசுவின் சீஷர்கள் மேல் பரிசுத்த ஆவியானவர் வந்து இறங்கினார். இதுவே சபையின் ஆரம்ப நாள். இந்த அடிப்படை அனுபவத்தைப் பற்றிய விஷயத்தில் பல நூற்றாண்டுகளாக பெரும்பான்மையான சபைகள் விலகிச் சென்றுவிட்டன. ஆனால் பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெற்றதிலிருந்து தான் சபையே ஆரம்பமானது.

பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்திலிருந்து அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினி மயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள் (அப். 2:1–4).

உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் நற்செய்தியை அறிவிக்க கட்டளையிட்ட நமது ஆண்டவர் கூறின அந்த கட்டளையை கவனியுங்கள். அன்றியும், அவர் அவர்களுடனே கூடி வந்திருக்கும்போது, அவர்களை நோக்கி : யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்.ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப்போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார் (அப்.1:4,5).

வானத்தையும், பூமியையும் படைத்த நமது ஆண்டவராகிய இயேசுவின் மேல் பரிசுத்த ஆவியானவர் ரூபங்கொண்டு புறாவைப் போல இறங்கினார் (லூக்கா 3:21,22). இயேசுவின் தாயாகிய மரியாள் இந்த அனுபவத்தை பெந்தெகொஸ்தே நாளில் பெற்றார்கள். அப்போஸ்தலர்கள் அனைவரும் பெற்றனர் (அப்.1:14).

இன்று பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெறாத கிறிஸ்தவர்கள் அதிகம். ஏன் அவர்கள் பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெறாமலிருக்கிறார்கள்? ஒன்று, அவர்களுக்கு இப்படிப்பட்ட ஓர் அனுபவம் உண்டு என்று தெரியவில்லை. அப்போஸ்தலனாகிய பவுல் எபேசுவிற்குப் போய் அங்கிருந்த விசுவாசிகளை சந்தித்து, "நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா?" என்று கேட்டார். அப்படிப்பட்ட ஓர் அனுபவம் உண்டு என்று எங்களுக்குத் தெரியாதே என்றார்கள் (அப்.19:1,2).

ஏன் அவர்களுக்குத் தெரியவில்லை? அவர்களுடைய சபைப் போதகர் அவர்களுக்கு அதைப் பிரசங்கிக்கவில்லை. ஏன் போதகர்கள் இதைப் போதிப்பதில்லை? போதகர்களுக்கு இந்த அனுபவத்தைப் பற்றிய நம்பிக்கை இல்லை. போதகர் எதை விசுவாசிக்கின்றாரோ அதைத்தான் பிரசங்கிப்பார்.

பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெற்ற போதகர்களிலும் அநேகர் இதைத்

தெளிவாகப் போதிப்பதில்லை. விசுவாசிகள் இதைப் பெற்றுக்கொள்ள வழிநடத்துவதில்லை. விசுவாசிகளில் அநேகருக்கு இதைப் பெற்றுக்கொள்ள வாஞ்சை இருக்கிறது. ஆனால் எப்படிப் பெற்றுக் கொள்வதென்று தெரியவில்லை. ஆதிசபையார் இந்த அனுபவத்தைப் பெற்றிருந்தனர். இந்த அனுபவத்தைக் குறித்து தெளிவாய்ப் போதித்தனர்.

**பெந்தெகொஸ்தே நாளோடு இந்த அனுபவம் முடிந்து போகவில்லை.**

1. எருசலேமிலுள்ள சபையார் அனைவரும் பெற்றிருந்தனர் (அப். 2:1-4).
2. சமாரியாவில் பிலிப்பின் மூலமாக இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்றவர்கள். பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள வழிநடத்தும்படி பேதுருவும், யோவானும் சமாரியாவிற்கு அனுப்பப்பட்டனர். சமாரிய விசுவாசிகளும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றனர் (அப். 8:15-17).
3. செசரியா பட்டணம் - கொர்நேலியு என்ற ரோம அதிகாரி தேவ பக்தியுள்ளவனாக இருந்தான். அவன் தேவ நடத்துதலின்படி யோப்பா பட்டணத்திலிருந்த பேதுருவை அழைத்து இயேசுவின் நற்செய்தியைக் கேட்டான். பேதுரு பிரசங்கித்துக் கொண்டிருந்தபோதே பரிசுத்த ஆவியானவர் கூடியிருந்த அனைவர் மேலும் இறங்கினார். அவர்கள் அனைவரும் பரிசுத்த ஆவியைப் பெற்றனர் (அப்.10:24-36).
4. எபேசு பட்டணம் – நாம் முன்பே பார்த்தபடி பவுல் எபேசுவிற்கு வந்து அங்கிருந்த விசுவாசிகள் பரிசுத்த ஆவியைப் பெறாமலிருந்ததைக் கண்டு அந்த அனுபவத்தை பெற்றுக்கொள்ள அவர்களை வழிநடத்தினார். 12 பேர் பரிசுத்த ஆவியைப் பெற்றனர் (அப். 19:1-7).

## சபை சரித்திரத்தில் இந்த அனுபவம்

முதல் 5 நூற்றாண்டுகளின் சபை சரித்திரத்தில் இந்த அனுபவத்தைப் பற்றிய குறிப்புகள் ஆங்காங்கே இருக்கின்றன.

**சபையின் இருண்ட காலம்**

கி.பி. 3-ம் நூற்றாண்டிற்குப் பின் சபைக்கிருந்த உபத்திரவம் நீங்கி கிறிஸ்தவம் அரசாங்க மார்க்கமாக மாறியபோது சபை எண்ணிக்கையில் வேகமாக வளர்ந்தது. ஆனால் ஆவிக்குரிய நிலையில் தாழ்ந்துவிட்டது. அரசியல் தலைவர்கள் சபையின் தலைவர்களானார்கள். சபை ஓர் அரசியல் நிறுவனமாக மாறிவிட்டது. வேத வசனம் புறக்கணிக்கப்பட்டது. சபை மனித சட்டங்களால் நிர்வகிக்கப்பட்டன. வேத வசனங்களுக்கு முரண்பட்ட மூடப்பழக்கவழக்கங்கள் சபைக்குள் நுழைந்தன. பாவமன்னிப்பு என்றால் என்ன?. பரிசுத்த ஆவியின் அபிஷேகம் என்றால் என்ன என்று தெரியாத சபையாக மாறிற்று.

**சபையின் வளர்ச்சி**

மார்ட்டின் லூத்தர் மூலம் சபையில் மறுமலர்ச்சி உண்டானது. பரிசுத்த வேதாகமம் பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டது. போதகர்கள் மற்றும் சபையாருக்கும் சத்தியத்தைப் பற்றி தெளிவு உண்டாக ஆரம்பித்தது. 18,19 நூற்றாண்டுகளில் வசன எழுப்புதல் உண்டானது. பரிசுத்த வாழ்வு வலியுறுத்தப்பட்டது. 20-ம் நூற்றாண்டில் பரிசுத்தத்தைப் பற்றிய வாஞ்சை உண்டாகி ஏராளமான பேர் இந்த அனுபவத்தைப் பெற்றனர். தற்போது சுமார் 70 கோடி பேர் பரிசுத்த ஆவியைப் பெற்றுள்ளார்கள் என்று ஓர் ஆய்வு கூறுகிறது.

## பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் மூலம் பெறும் ஆசீர்வாதங்கள்

1. ஆவிக்குரிய பெலனடைகிறோம். இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழ்கிறோம். தைரியமாய் சாட்சி பகர்வோம் (அப்.1:8).
2. ஜெப வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவர் பெரிதும் உதவுகிறார் (ரோமர் 8:26,27).
3. நாம் தேவனுடைய பிள்ளைகள் என்பதை தெளிவாக உணரச் செய்கிறார் (ரோமர் 8:16).
4. ஆவியின் வரங்களைப் பெற்றுக்கொள்ள வழி ஏற்படுகிறது (1 கொரி. 12:1-11).
5. ஆவியின் போராட்டங்களில் வெற்றியடைய ஆவியானவர் உதவுகிறார் (எபே. 6:11-18)
6. சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை வழி நடத்துவார் (யோவான் 16:13).
7. ஆவியின் கனியாகிய தெய்வீக சுபாவங்கள் நம்மில் உருவாகின்றன (கலா. 5:22,23).
8. பாவம், நீதி, நியாயத்தீர்ப்பைக் குறித்து கண்டித்து உணர்த்தும் உள்ளுணர்வு ஏற்படும். தேவ செய்தியிலும் இது வெளிப்படும் (யோவான் 16:8).
9. நற்செய்தி அறிவிக்க இது தெய்வீக பெலனைக் கொடுக்கிறது (அப். 1:8;4:7-20; லூக்கா 4:18-21).
10. தெய்வீக சுகம் கிடைக்க ஆவியானவர் உதவுகிறார் (அப். 10:38; லூக்கா 4:18-21).
11. ஆவியானவர் நமக்குள் தங்கி நம்மைத் தேற்றுகிறார் (யோவான் 14:16,17).
12. எதிர்காலத்தில் நடக்கப் போகிறவைகளை ஆவியானவர் முன்னறிவிப்பார் (யோவான் 16:13).
13. தேவ சித்தத்தின்படி நடக்க வழிநடத்துவார் (ரோமர் 8:1).
14. பெலன், அன்பு, தெளிந்த புத்தி, தெய்வீக தைரியம் ஆகியவற்றைத் தருகிறார் (2 தீமோ. 1:7).

இப்படிப்பட்ட ஏராளமான நன்மைகளைத் தருகின்ற ஆவியானவர் தரும் அபிஷேகத்தைப் பெறாத கிறிஸ்தவர்களும். போதகர்களும் எப்படி இருப்பார்கள் என்று சிந்தித்துப் பாருங்கள்.

## இன்று

பரிசுத்த ஆவியின் அபிஷேகம் ஒரு சபைப் பிரிவினருக்குரியது என்று ஒதுக்கப்பட்டுவிட்டது. பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை நம்பாத சபைகளின் எண்ணிக்கை அதிகம். இவர்கள் நடத்தும் ஆராதனை பாடலில், துதியில் உயிரில்லை. செய்தியில் உயிரில்லை. வாரந்தோறும் கூடினாலும் பாரம்பரிய நிகழ்ச்சிகள் நடக்கின்றன. இந்த நிலை தொடர்ந்தால் இன்னும் எத்தனை ஆயிரம் ஆண்டுகள் கடந்து சென்றாலும் தேசம் இரட்சிப்படையாது.

இன்றுள்ள பெரும்பாலான சபைகள் உலகப் பிரகாரமாக ஓர் நிறுவனம் போலவே செயல்படுகிறது. இவர்கள் செய்கின்ற சேவைகளை எந்த மதத்தாரும் செய்ய முடியும். மனிதனை பாவத்திலிருந்து விடுவிக்க நற்செய்தி அறிவிப்பதே சபையின் பிரதான ஊழியம். மனுக்குலத்தின் பெரிய பிரச்சனை எது? விபச்சாரமா? கொலை, கொள்ளையா? ஜாதி, மத இனக்கலவரமா? தீவிரவாதமா? லஞ்சமா? வறுமையா? யுத்தங்கள், சண்டைகள், ஊழல்களா? இந்தத் தீமைகளை எந்த அரசியல் கட்சியும் ஒழிக்க முடியாது. எந்த அரசாங்கமும் அழிக்க இயலாது. இயேசு ஒருவரே இவைகளை ஒழிக்கவும், மனிதனை மாற்றவும் வல்லவர். இப்படிப்பட்ட வல்லமையான செய்தியை பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றவர்கள்தான் கொடுக்க முடியும். எனவே இன்றைய சபையின் பிரதான தேவை பரிசுத்த ஆவியின் நிறைவும் அதைத் தொடரும் நற்செய்திப் பணியும், அதன் பலனாக ஆங்காங்கே சபைகள் கட்டப்படுவதுமாகும்.



# குடும்பத்திற்கான ஆவிக்குரிய இலக்குகள்


**Rev. J. ஸ்டேன்லி மாணிக்கராஜ்**

செயலாளர், தமிழ் பிரதேச ஏ.ஜி. சபைகள்
மூத்த போதகர், ஏ.ஜி. சர்ச், வேலூர் - 6


ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் யாவருக்கும் எங்களது புத்தாண்டு வாழ்த்துக்கள். இன்னுமொரு ஆண்டை காணச் செய்த தேவாதி தேவனுக்கு மகிமை உண்டாவதாக. நாம் நிற்பதும் நிர்மூலமாகாதிருப்பதும் அவருடைய கிருபையே.

ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்திலும், புதிய தீர்மானங்கள் எடுப்பது பெரும்பாலானவர்களின் வழக்கம். ஆனால் கடைசிவரை அதை செய்கின்றோமா என்பது கேள்விக்குறிதான்.

We need to have something to do, something to love, something to hope என்று பழைய கூற்று ஒன்று கூறுகிறது.

இலக்குகள் எதுவும் இல்லையென்றால் நாம் சோர்ந்து போய் விடுகிறோம். இலக்குகள் நம்பிக்கையையும், தெளிவான வழிகாட்டுதலையும் நமக்குக் கொடுக்கிறது.

பொருளாதாரத்திற்கு, கல்விக்கு, விடுமுறை பிரயாணங்களுக்கு, எதிர்கால வேலைக்கு என பல பகுதிகளுக்கு இலக்குகள் வைக்கும் அநேக விசுவாசிகள், ஏனோ ஆவிக்குரிய வாழ்க்கைக்கு இலக்குகள் வைக்கிறதில்லை. இலக்குகள் இல்லாததினால் தான் அநேகர் ஆவிக்குரிய வாழ்க்கையில் தோற்றுவிடுகிறார்கள். “தேவ பக்திக்கு ஏதுவாக முயற்சி பண்ணு” (1 தீமோ.4:7) என்ற தேவ வார்த்தை தெளிவாக விளக்குகிற காரியங்களில் ஒன்று பக்தி தானாக வருகின்ற ஒன்றல்ல. முயற்சிக்கும்போது பெற்றுக்கொள்ள கூடிய ஒன்று என்பதுதான்.

ஒவ்வொரு குடும்பத்திலும் தனிப்பட்ட விதத்தில் ஒவ்வொருவரும் இலக்குகள் வைத்திருந்தாலும் குடும்பமாக கணவன்-மனைவியாக சேர்ந்து செய்ய வேண்டிய இலக்குகளையும் கண்டிப்பாக வைத்திருக்க வேண்டும். உங்களுடைய சிந்தனைக்காகவும், ஒரு சிறிய வழிகாட்டுதலுக்காகவும் ஒரு சில காரியங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இவைகளிலும், மேலும் ஆண்டவர் உங்களுக்கு உணர்த்துகிற காரியங்களிலும் சில இலக்குகளை தீர்மானியுங்கள். செயல்படுத்த ஆரம்பியுங்கள்.

- ஒரு நாளில் தனியாக, குடும்பமாக வாசிக்க வேண்டிய அதிகாரங்கள் (முறையாக)
- ஒரு நாளில் தனியாக, குடும்பமாக ஜெபிக்க வேண்டிய ஜெப நேரங்கள்.
- ஒரு வாரத்தில் தனியாக, குடும்பமாக உபவாசம் இருக்க வேண்டிய நேரங்கள்.
- ஒரு மாத காலத்திற்குள் வாசிக்க வேண்டிய ஆவிக்குரிய புத்தகம்/புத்தகங்கள்.
- மாதம் ஒரு முறை அல்லது இரு முறை கணவன்-மனைவியாக திருச்சபைக்கு சென்று ஜெபிக்கிற நேரங்கள்.
- ஆண்டவர் உங்களுக்கு கொடுத்திருக்கிற தாலந்துகள், திறமைகள் போன்றவற்றை திருச்சபை மூலமாக செயல்படுத்துவதற்கு ஒரு வாரத்தில் ஒதுக்கும் நேரங்கள்.
- திருச்சபைக்கும், மற்ற ஊழியங்களுக்கும் கொடுக்கும் பொருளாதார உதவிகள்.

- திருச்சபையில் நீங்கள் ஈடுபட விரும்பும் ஊழியங்கள் மற்றும் அதற்கான முயற்சிகள்.
- வாய்ப்புகள் இருக்கும் பட்சத்தில் குடும்பமாக அல்லது இரு குடும்பங்களாக இணைந்து ஒரு கிராமத்தை தத்தெடுத்து, திருச்சபையோடு சேர்ந்து ஊழியம் செய்தல்.
- குடும்பமாக நீங்கள் சந்தித்து, திருச்சபைக்கு வழிநடத்தும் குடும்பங்களின் எண்ணிக்கைகள்.
- குடும்பமாக முயற்சித்து ஞானஸ்நானத்திற்கு நேராக வழிநடத்த விரும்பும் நபர்களின் எண்ணிக்கைகள்.
- திருச்சபையில் உள்ள ஏழை எளியவருக்கு உதவி செய்யும் வழிமுறைகள் (அவர்களுடைய அடிப்படை தேவைகள், கல்வி etc.)
- திருச்சபை இல்லாத இடங்களிலும் நிலங்கள் வாங்க, கட்டிடங்கள் கட்ட உதவி செய்ய பொருளாதாரங்களை தீர்மானித்தல்.
- வட இந்தியாவிற்கோ, தமிழகத்தின் பின்தங்கிய மாவட்டத்திற்காய் மிஷனரி பயணம் போய் ஊழியம் செய்யும் நாட்கள்.

இவைகளோடு ஆண்டவர் தனிப்பட்ட விதத்தில் உங்களுக்கு வெளிப்படுத்தும் காரியங்களையும் இணைத்துக் கொள்ளுங்கள்.

## நடைமுறை ஆலோசனைகள்

1. இலக்குகளை தெளிவாக எழுதி அடிக்கடி கண்ணில்படுகிற இடத்தில் வையுங்கள்.
2. ஒரு சில நாட்களில் அல்லது வாரத்தில் செய்ய முடியாமல் போனால் சோர்ந்து போகாமல், நிறுத்தாமல், தொடர்ந்து செய்ய முயற்சியுங்கள்.
3. உங்களுடைய இலக்குகளை குடும்ப உறுப்பினர்களோடு பகிர்ந்துகொண்டு, இணைந்து செய்ய முயற்சியுங்கள்.
4. உங்களால் முடியாத ஒன்றை செய்ய முயற்சிக்க வேண்டாம். அடைய முடியாத இலக்குகளையும் தீர்மானிக்க வேண்டாம். முடிந்த சிறு சிறு இலக்குகளில் ஆரம்பித்து பெருக்கி கொண்டே போங்கள்.
5. குடும்பத்தில் ஒருவர் சோர்ந்துபோனாலும் விட்டுவிட முயற்சித்தாலும், மற்றவர்கள் உற்சாகப்படுத்தி செய்ய வையுங்கள்.
6. சிறு பிள்ளைகளையும் கூட உற்சாகப்படுத்தி இலக்குகளை அடைய ஊக்கப்படுத்துங்கள். எதிர்காலத்தில் அது அவர்களுக்கு பெரிய உதவியாக இருக்கும்.
7. எதிர்மறையான சிந்தனைகளுக்கு இடம் கொடுக்காமல் இலக்குகளை மையமாக வைத்த முயற்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.

இப்புதிய ஆண்டில் இதுவரை செய்யாத, சாதிக்காத, முயற்சித்து தோற்றுப்போன பல காரியங்களை செய்ய ஆண்டவர் கிருபை தருவாராக. உங்களுடைய குடும்பம், அநேக குடும்பங்களுக்கும், திருச்சபைகளுக்கும், தேவ இராஜ்ஜியத்திற்கும் ஆசீர்வாதமாக மாறுவதாக. ஆமென்.

**அவர் உமது மனவிருப்பத்தின்படி உமக்குத் தந்தருளி, உமது ஆலோசனைகளையெல்லாம் நிறைவேற்றுவாராக (சங்.20:4).**

**நான் ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி பரம அழைப்பின் பந்தய பொருளுக்காய் இலக்கை நோக்கி தொடர்கிறேன் (பிலி.3:13,14).**



# வேதாகமத்தில் மிகச்சிறிய புத்தகங்கள்
# பிலேமோன்


Rev. Dr. சாமுவேல் ராஜ் R.

All India National Director, Global University


வேதாகமத்திலுள்ள அறுபத்தாறு புத்தகங்களில் ஒரே ஒரு அதிகாரத்தையுடைய புத்தகங்கள் மொத்தம் ஐந்து : ஒபதியா, பிலேமோன், IIயோவான், III யோவான், யூதா. அப்போஸ்தலனாகிய பவுல் தனது நண்பராகிய பிலேமோன் என்பவருக்கு எழுதிய தனிப்பட்ட கடிதம்தான் **பிலேமோனுக்கு எழுதிய நிருபம்.** ரோமாபுரியில் பவுல் சிறையிலிருந்த காலத்தில் (அப். 27-28) கொலோசெயர், எபேசியர், பிலேமோன் ஆகிய மூன்று நிருபங்களையும் எழுதி, தீகிக்கு மற்றும் ஒநேசிமு ஆகியோரது கையில் கொடுத்து அனுப்பினார்.

### ஒரு நல்ல சரித்திரச் சம்பவம் :

பிலேமோன் நிருபத்தின் பின்னணியத்தில் உள்ள முக்கிய காரியங்களை இங்கு காண்போம்.

### செல்வந்தனாகிய பிலேமோன் :

மலையாளப் பெயர்போல் தோன்றும் இப்பெயர் கிரேக்க பெயராகும். பிலேமோன் என்ற செல்வந்தர், கொலோசெ என்ற பட்டணத்தில் வாழ்ந்து வந்தார். பவுல், எபேசு பட்டணத்தில் மூன்று ஆண்டுகள் ஊழியம் செய்த காலத்தில் (கி.மு.52-55). பிலேமோன், பவுல் மூலம் கிறிஸ்துவுக்குள் கொண்டுவரப்பட்டார். கிறிஸ்தவராய் மாறிய இவரது வீட்டில் ஒருசபை ஆரம்பிக்கப்பட்டது. அந்த சபையே கொலோசெ பட்டண சபையாகும். இச்சபைக்குத்தான் பவுல் கொலோசெயருக்கு எழுதின நிருபத்தை எழுதி அனுப்பினார். பிலேமோனது மனைவி அப்பியாள் (வச.2). கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்ட பிலேமோன், பவுலின் நெருங்கிய நண்பராகவும் மாறினார். பவுல் தன் உடன் ஊழியர் என்று அழைக்குமளவிற்கு கிறிஸ்துவ முதிர்ச்சியும், வளர்ச்சியும் பெற்றிருந்தார்.

### அடிமை வேலைக்காரனாகிய ஒநேசிமு :

அக்கால ரோம சாம்ராஜ்ஜியத்தில் ஆறுகோடிக்கும் அதிகமான (ஆண், பெண்) அடிமை வேலைக்காரர்கள் இருந்தனர். இவர்கள் செல்வந்தர்களுக்கு கொத்தடிமைகளாக வேலை செய்து வந்தனர். அடிமை வியாபாரமும் அக்காலத்தில் இருந்தது. கிறிஸ்துவ மார்க்கம் வளர்ந்து வந்த காலத்தில், இப்படிப்பட்ட அடிமைகள் பலரும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். அவர்களது எஜமான்களில் பலரும் கிறிஸ்தவராய் மாறினர். இவர்களையே 'எஜமான்களே', 'வேலைக்காரரே' என பவுல் தனது நிருபங்களில் செல்வந்தரான பிலேமோனுக்கு ஒநேசிமு என்ற அடிமை, வேலை செய்து வந்தான். ஒநேசிமு என்ற பெயருக்கு பிரயோஜனமற்றவன் அல்லது உபயோகமற்றவன் என்பது பொருள். உண்மையிலேயே உபயோகமற்ற இந்த ஒநேசிமு, பிலேமோன் வீட்டிலிருந்து தப்பி ஓடிவிட்டான். (ஒருவேளை திருடிவிட்டு ஓடியிருக்கலாம்). பெரும் மக்கள் கூட்டத்தில் தப்பி மறைந்துவிட முயற்சித்து, ரோமாபுரிக்குச் சென்று சேர்ந்தான்.

### சிறையில் வாடிய பவுல் :

ரோமாபுரி சிறையில் வாடி வதங்கிக் கொண்டிருந்த பவுல், சபைகளுக்கு நிருபங்களை எழுதினார். தான் சந்தித்த நபர்களை கிறிஸ்துவுக்குள் வழிநடத்தினார். எப்படியோ ஒநேசிமு, பவுலை சந்திக்கும் சந்தர்ப்பம் வந்தது. பவுல் மூலம் இவன் இரட்சிக்கப்பட்டான். இந்த உபயோகமற்றிருந்த ஒநேசிமு, நல்ல கிறிஸ்தவனாகவும் பவுலுக்கு நல்ல மகனாகவும் மாறினான். எனினும், ஓடி ஒளிந்து வாழும் ஒநேசிமு, தனது பழைய எஜமானிடம் சென்று, மன்னிப்புப் பெற வேண்டும் என விரும்பிய பவுல், அவனை பிலேமோனிடம் அனுப்பி வைத்தான்.

### சிபாரிசுக் கடிதம் :

பிலேமோனிடம் புறப்பட்டுச் சென்ற ஒநேசிமுவிடம் பவுல் கொடுத்தனுப்பிய சிபாரிசுக் கடிதமே 'பிலேமோனுக்கு எழுதிய நிருபம்' ஆகும்.

பொதுவாக ஒரு அடிமை தப்பி ஓடிவிட்டால், அவனைக் காண்பவர்கள் அவன் எஜமானிடத்தில் கொண்டு சேர்க்கலாம். ஆனால் பிலேமோனிடத்தில் ஒநேசிமுவைச் சேர்ப்பதற்கு முன்பே, பரம எஜமானராம் இயேசு கிறிஸ்துவினிடத்தில் அவனை வழிநடத்திய பவுலின் தரிசனத்தைப் பாருங்கள்! அதன் பின்பு இந்த சிபாரிசுக்கடிதத்துடன் ஒநேசிமுவை அவனது எஜமானிடத்துக்கு அனுப்புகிறான். ஏற்கெனவே பரிசுத்தவான்களுடைய உள்ளத்தை இளைப்பாறப்பண்ணி கொண்டிருக்கும் பிலேமோன், இப்பொழுது இரட்சிக்கப்பட்டிருக்கும் இந்த வேலைக்காரனாகிய ஒநேசிமுவைத் தண்டியாமல் ஏற்றுக்கொள்வார் எனப் பவுல் கருதினார்.

### கடிதத்தில் கண்ணியம் :

பவுல்தான் பிலேமோனை கிறிஸ்துவுக்குள் நடத்திய அப்போஸ்தலன், எனினும் அப்போஸ்தல அதிகாரத்தைப் பயன்படுத்தாமல், கிறிஸ்துவ அன்பை அடிப்படையாகக் கொண்டு இக்கடிதத்தை அனுப்புகிறார் (வச 9). எதற்கும், யாருக்கும் சிபாரிசுக் கடிதம் கொடுக்கும் பாணியில் அல்ல; மாறாக, ஒநேசிமுவின் மனந்திரும்புதலை அடிப்படையாகக் கொண்டு இக்கடிதம் அனுப்பப்பட்டது (வச 10).

'இதை எனக்குச் செய்யும்' என பிலேமோனிடம் திணிக்கும் உரிமை பவுலுக்கு இருந்தாலும், பிலேமோனிடம் மனவிருப்பத்தின்படியே அதை தீர்மானிக்கட்டும் என பிலேமோனுக்கு எழுதும் கடிதம் இது. உதவி செய்ய வேண்டும் என பிலேமோனிடம் நிர்பந்திக்கவில்லை (வச 10-14).

ஒநேசிமு தப்பி ஓடிப்போனதும், அவன் இரட்சிக்கப்படுவதற்கு கர்த்தர் நியமித்த மார்க்கமே என தேவாதீனத்தை கர்த்தருடைய சர்வ ஆளுகையையும் விளக்கி எழுதிய கடிதம் இது.

### நாமும் ஒநேசிமுதானே!

"ஒரு வகையில் பார்த்தால் நாம் எல்லோருமே ஒநேசிமுதான்" என்று மார்ட்டின் லூதர் சொல்லுகிறார்.

கீழ்க்கண்ட வசனங்களைக் கவனியுங்கள் :

"அவனை நான் உம்மிடத்திற்கு அனுப்புகிறேன். என் உள்ளம் போலிருக்கிற அவனை நீர் ஏற்றுக்கொள்ளும்" (12).

"என்னை ஏற்றுக்கொள்ளுவதுபோல அவனையும் ஏற்றுக்கொள்ளும்" (17).

"அவன் உமக்கு யாதொரு அநியாயஞ்செய்ததும், உம்மிடம் கடன்பட்டதும் உண்டானால், அதை என் கணக்கிலே வைத்துக்கொள்ளும்" (18).

"நான் அதைச் செலுத்தித் தீர்ப்பேன்..." (19)

நமதாண்டவர் இயேசு கிறிஸ்துவும், இப்படிப்பட்ட வேண்டுதலைத்தான் பிதாவினிடத்தில் பாவிகளாகிய நம் ஒவ்வொருவருக்காகவும் வைக்கிறார்; என்னே அவரது அன்பு! தம்மை பிதாவாகிய தேவன் ஏற்றுக்கொள்ளுவதுபோல, நம்மையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே இயேசுவின் விருப்பம். நம்முடைய நீதி யாவும் கந்தைதானே! பிதாவாகிய தேவனிடத்தில் நாம் சேர, நம்மில் தகுதியுள்ளவர்களல்ல. கிறிஸ்துவின் மூலம் தேவனுடைய குடும்பத்தில் சேரும் ஒநேசிமாக தேவன் நமக்குப் பாராட்டின கிருபை பெரியது.

ஒநேசிமுவின் கடன்களை மன்னித்துவிடும்படிக் கூறாமல், அதை என் கணக்கில் வைத்துக்கொள்ளும் (18) எனக்கூறும் பவுலைப்போல, கிறிஸ்துவும் நம் கடனை அவர் கணக்கில் வைத்துக்கொண்டார்! கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது, நமது (பாவ) கடன்களை அவரே ஏற்றுக்கொண்டார்!!

ரோம சாம்ராஜ்ஜியத் தண்டனைச் சட்டத்தின்படி, தப்பி ஓடிப்போன அடிமைகள் கொலை செய்யப்படலாம். ஆனால் ஒநேசிமுவை ஏற்றுக்கொள்ளும்படி எழுதுகிற பவுலைப்போல, இயேசு நமக்காகப் பரிந்துபேசுகிறார். நரக அழிவினின்றும் நம்மை மீட்டுக்கொண்டுள்ளார்.

கிறிஸ்தவர்கள் தங்களிடத்தில் வேலைப்பார்க்கும் கொத்தடிமைகளை எப்படி நடத்தவேண்டும் என்னும் சமூகச் சீர்திருத்த மடலாகவும் இக்கடிதத்தை பவுல் எழுதுகிறார் எனலாம். செல்வந்தரான பிலேமோனுடனும், அடிமையான ஒநேசிமுடனும் ஏற்ற இறக்கமின்றி, இருதயப்பூர்வமான அன்பும் நட்பும் காட்டிய பவுலின் சிறந்த குணம் நாம் பின்பற்றத்தக்கதான நல்ல கிறிஸ்தவ மாதிரி ஆகும்.

உதவாக்கரையான ஒநேசிமு, சுவிசேஷத்தின் வல்லமையால் மாற்றமடைகிறான். அறிஞர்கள் கூறுகிறபடி பிற்காலத்தில் ஒநேசிமு எபேசுவில் ஒரு பிஷப்-ஆக (கண்காணி) ஏற்படுத்தப்பட்டார் என்பது பாரம்பரிய நம்பிக்கை. தப்பி ஓடிய அடிமை-வேலைக்காரன் பிரியமான சகோதரனாய் மாறுவதும், சபை ஊழியத்தில் தலைமைப் பொறுப்பில் வருவதும் சுவிசேஷத்தின் வல்லமையே; அது தேவனுடைய மகா பெரிய கிருபையே.

தப்பி ஓடும் ஒநேசிமுக்கள், தற்செயலாய் அல்ல, தேவத்திட்டத்தின்படியே பவுல்களை சந்திக்கட்டும்! சிபாரிசுக் கடிதத்துடன் திரும்பி வரட்டும்!!

பிலேமோன் நிருபம் மேற்சொன்ன சிறு பின்னணிகளுடன் திரும்பத்திரும்ப வாசித்து, தியானிக்கப்பட வேண்டிய சின்னஞ்சிறு ஆவிக்குரிய அறிவுப் பெட்டகமாகும்.

---


**தாங்கள் பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு செய்திகள், கவிதைகள், துணுக்குகள், கடிதங்கள், சாட்சிகள் யாவற்றையும் அனுப்பித் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்**

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

ஆசிரியர், **பரிபூரண ஜீவன்,**

43/3 ஆபிசர்ஸ் காலனி, புத்தூர், திருச்சி - 17

செல் : 94434 15484

# அமைதி வேளை: என் தேவனும் நானும்

தேவ பிள்ளைகள் அனுதினமும் தேவனோடு தனித்து ஜெபத்திலும் அவர் வார்த்தையோடும் தொடர்பு கொள்ளும் நேரம் அமைதி வேளை (Quiet Time) என்று அழைக்கப்படுகிறது. அது தனியாக அவரோடு நாம் செலவிடும் அன்றாட பயிற்சியாகும். அது அவர் பிரசன்னத்தை அனுபவித்து, அவர் சத்தம் கேட்கிற நேரம்.



இதனைச் செய்யத் தவறுகிற கிறிஸ்தவர்கள் குளிர்ந்தும், பின்மாற்றத்திலும் சென்று விடுவார்கள். ஆகவே அமைதி வேளையை தவறாமல் தினமும் பின்பற்றினால் தேவனில் அனுதினமும் வளரலாம். இயேசு பிதாவோடு தனித்திருந்தார் (மத்தேயு 14:23 ; லூக்கா 5:16) என்று வேதம் கூறுகிறது. அதுவே அவருடைய வாழ்க்கை மற்றும் ஊழியத்தின் வெற்றிக்கு காரணமாயிருந்தது. இந்த புதிய 2019 ஆண்டில் தேவனோடு உள்ள உறவில் நாம் பெலப்பட, வெற்றி வாழ்வு வாழ, தேவனோடு தனித்து அதிக நேரம் செலவுப் பண்ண தீர்மானிப்போம்!

## 1. அமைதி வேளையின் நோக்கம்
## PURPOSE of the Quiet Time

● அமைதி வேளையின் முதலாவது நோக்கம் தேவனோடு தொடர்பு கொள்வது. தேவனும் இதைத்தான் விரும்புகிறார். அதற்காகத்தான் அவர் மனிதனைப் படைத்தார்.

● இரண்டாவது நோக்கம் ஆவியின் பெலத்தைப் புதுப்பித்துக் கொள்வதற்காக. கிறிஸ்தவ வாழ்க்கை உலகம், மாமிசம், பிசாசு இவற்றோடு போராடுகிற ஒரு வாழ்க்கை. எனவே ஒரு பேட்டரியை எப்படி சார்ஜ் ஏற்றி உபயோகப்படுத்துவோமோ அவ்வாறே நம் ஆவிக்குரிய பெலத்தை அவர் சமூகத்தில் காத்திருந்து அனல் மூட்டி எழுப்ப வேண்டும். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் புது பெலன் அடைவார்கள் (ஏசாயா 40:31).

● கடைசியாக, அவரோடு அனுதினமும் நேரம் செலவழிக்கும்போது புதிய கிருபை, புதிய அபிஷேகம் நமக்கு கிடைக்கிறது (புலம்பல் 3:23 ; சங்கீதம் 92:10).

## 2. அமைதி வேளைக்கு ஆயத்தம்
## PREPARATION for the Quiet Time

நாம் எதையாவது நல்ல முறையில் செய்ய வேண்டுமானால் ஆயத்தம் அவசியம். திட்டமிடத் தவறினால்... தவறுவதற்கு திட்டமிடுகிறோம். எனவே தனியான இடம், குறிப்பிட்ட நேரம், சில உபகரணங்களைத் தேர்வு செய்வது மிக அவசியம்.

**இடம் :** அமைதியான, தனிமையான ஓர் இடத்தைத் தெரிந்து கொள்ளுங்கள். இயேசு பிதாவைத் தனிமையில் சந்தித்தார் (மாற்கு 1:35). ஆள் ஆரவாரமில்லாத அமைதியான மலைப்பகுதியை இயேசு தேர்ந்தெடுத்தார். மணிக்கணக்கில் பிதாவோடு பேசினார். நாமும் மக்கள் சந்தடியில்லாத அமைதியான இடத்தைத் தெரிந்து எடுக்க வேண்டும்.

**நேரமும், காலமும் :** இது அனுதின செயல், எனவே ஒரு குறிப்பிட்ட நேரம், சரியான இடம் ஆகியவற்றைத் தெரிவு செய்ய வேண்டும். காலை நேரம் தேவனோடு தொடர்பு

கொள்ள மிக ஏற்ற நேரம். முதலாவது நாம் தேவனை சந்தித்துப் பேசுவது அவர் மேல் நாம் வைத்திருக்கும் அன்பை வெளிப்படுத்துகிறது. நாம் அதிகமாய் நேசிக்கும் ஒருவரோடு பேசும்போது நேரத்தை எண்ணமாட்டோம். குறைந்தது ஒரு மணி நேரமாவது அமைதி வேளையில் நாம் தேவனோடு செலவிட வேண்டும் (மாற்கு 14:37).

**தேவையான பொருட்கள் :** அமைதி வேளை பயனுள்ளதாய் அமைய பைபிள், நோட்புக், பேனா, மற்றும் அனுதின மன்னா போன்ற ஒரு தியானப் புத்தகம் ஆகியவற்றை உபயோகிக்கலாம். தேவன் நமக்குத் தரும் வெளிப்பாட்டைக் குறிக்கவும், முக்கியமான ஜெபக்குறிப்புகள், ஜெபத்திற்கு நாம் பெற்றுக் கொண்ட பதில் இவைகளைக் குறிக்க நோட் புக் அவசியம்.

## 3. அமைதி வேளையின் நிகழ்ச்சிகள்
## PROGRAMME of the Quiet Time

அமைதி வேளையில் தேவன் வேத வசனங்கள் மூலம் நம்மோடு பேசுவார். நாம் ஜெபத்தின் மூலம் அவரோடு பேசுவோம் அமைதி வேளை நமக்கு பயனுள்ளதாய் அமைய கீழ்வரும் முறைகள் நமக்கு உபயோகமாயிருக்கும்.

**வேதத்தை வாசித்தல் (READ) :** வேதத்தை எடுத்து ஏதாவது ஒரு பகுதியை வாசிப்பதைக் காட்டிலும் ஒரு புத்தகத்தை தேர்வு செய்து தொடர்ந்து வாசியுங்கள். அனுதின வேதவாசிப்புக் கருவிகளைப் பயன்படுத்தினால் அதில் சொல்லப்பட்ட பகுதியைத் தொடர்ந்து வாசியுங்கள். உங்கள் தாய் மொழி வேதாகமம், அதோடு ஆங்கில வேத புத்தகத்தையும் உபயோகிக்கலாம். மெதுவாக ஒவ்வொரு வார்த்தையையும், வரியையும் உணர்ந்து வாசியுங்கள். நிச்சயம் தேவன் உங்களோடு பேசுவார்.

**திரும்பவும் நினைத்துப் பார்த்தல் (REFLECT) :** திரும்பவும் நினைத்துப் பார்த்தல் அமைதி வேளையில் மிக முக்கியம் (சங். 1 : 2, யோசுவா 1: 8). பவுல் தீமோத்தேயுவிடம் நான் சொல்கிறவைகளைச் சிந்தித்துக்கொள். கர்த்தர் எல்லாக் காரியங்களிலும் உனக்கு புத்தியைத் தந்தருள்வார் என்று கூறுகிறார் (2 தீமோ.2:7). இரவும், பகலும் வேதத்தை தியானிக்கிற மனுஷனுக்கு கர்த்தர் ஆசீர்வாதத்தை வாக்குபண்ணியிருக்கிறார். வேதத்தை வாசித்த பின் கீழ்காணும் கேள்விகளைக் கேட்டு வசனத்தைத் தியானியுங்கள் (S-P-E-C-I-A-L method).

1. நான் விடவேண்டிய பாவம் ஏதாகிலும் கூறப்பட்டுள்ளதா? (Sins to forsake?)
2. நான் பற்றிக்கொள்ள என்ன வாக்குத்தத்தம் உள்ளது? (Promises to claim?)
3. நான் பின்பற்ற ஏதாவது மாதிரி உள்ளதா? (Example to follow? )
4. நான் கீழ்ப்படியக் கட்டளை ஏதாவது இருக்கிறதா? (Command to obey?)
5. தேவனைப் பற்றி ஏதாவது வெளிப்படுத்தப்பட்டுள்ளதா? (Insights about God)
6. கடினமான வசனம் ஏதாவது உள்ளதா? (Any difficult verse? )
7. கற்றுக் கொள்ளப் பாடம் ஏதாவது உள்ளதா? (Lessons to learn?)

**குறித்து வைத்தல் (RECORD):** உங்கள் பிரயாசங்களின் பலனைப் பாதுகாக்க வேண்டும். நீங்கள் கற்றுக்கொண்ட காரியங்களை குறித்து வைக்கத் தவறாதீர். எல்லாவற்றையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளலாம் என்று நினைக்க வேண்டாம்.

நீங்கள் கற்றுக்கொண்ட காரியங்களை குறித்து வைத்தல் குறிப்பிட்ட காலகட்டத்தில் உங்களின் ஆவிக்குரிய வளர்ச்சியை மதிப்பிடுவதற்கு உதவுகிறது.

**மறுமொழி கூறுதல் (RESPOND):** நீங்கள் வாசித்த பகுதியிலிருந்து தேவன் உங்களோடு பேசலாம். உங்கள் பங்கிற்கு நீங்கள் ஜெபத்தின் மூலம் அவரோடு பேசுங்கள். ஜெபிக்கும்போது... ஆராதித்தல், பாவ அறிக்கை செய்தல், நன்றி செலுத்துதல், விண்ணப்பித்தல் ஆகிய படிகளைக் கையாளுங்கள். தேவனுடைய மகத்துவத்திற்காக ஆராதனையும், உணர்த்தப்பட்ட பாவங்களுக்காக பாவ அறிக்கையும், அவரிடம் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களுக்காக நன்றியும் செலுத்துங்கள். அவரைப் பிரியப்படுத்துகிற வாழ்க்கைக்கான வழி நடத்துதலுக்காகவும், கிருபைக்காகவும் விண்ணப்பம் செய்யலாம். உண்மையாய் செய்கிற ஜெபத்திற்கு அதிக பலன் உண்டு. அதற்கு அதிக நேரமும், ஒழுங்கும் மிக அவசியம். ஜெபக் குறிப்புகளைப்பயன்படுத்துங்கள். பதில் கிடைத்த ஜெபங்களைக் குறித்து வையுங்கள். பதில் கிடைத்த ஜெபங்களுக்கு நன்றி சொல்ல ஒரு நாளும் மறவாதிருங்கள்.

**நினைவிற்குக் கொண்டு வருதல் (RECOLLECT) :** அமைதி வேளை 30-60 நிமிடங்களில் முடிந்து விடும். அந்த நாளில் நீங்கள் பற்பல காரியங்களில் ரொம்ப பிஸியாக இருக்கலாம். எனவே நேரம் கிடைக்கும் போதெல்லாம் காலையில் தேவன் உங்களோடு பேசியதை மனதில் நிறுத்தி வாழ்க்கையில் அப்பியாசப்படுத்த மறக்க வேண்டாம்.

– ஆசிரியர்

## SOME CHRISTIAN RESOLUTIONS FOR THE NEW YEAR 2019

During the year I will:

Like PAUL, forget those things which are behind and press forward.

Like DAVID, lift up my eyes to the hills from where my help comes.

Like ABRAHAM, trust my God implicitly.

Like ENOCH, walk in daily fellowship with my heavenly Father.

Like MOSES, suffer rather than enjoy the pleasures of sin for a time.

Like CALEB and JOSHUA, refuse to be discouraged because of superior numbers.

Like JOB, be patient and faithful in all circumstances.

Like JOSEPH, turn my back on all evil advances.

Like GIDEON, advance even when my friends are few.

Like ANDREW, strive to lead my brother to Christ.

Like STEPHEN, manifest a forgiving spirit.



# சீஷராக்குவது தற்போது சவாலாக உள்ளது ஏன்?


## Rev. J. தேவதாசன் கலையரசன்

தலைமை போதகர், அம்பத்தூர் மண்டலம்


சீஷத்துவ நோக்கம் கொண்ட நற்செய்தி ஊழியம் என்ற கட்டுரையில் முதல் அத்தியாயம், **சீஷராக்குவது தற்போது சவாலாக உள்ளது ஏன்?** என்பதாகும்.

இக்கட்டுரையின் நோக்கம் நற்செய்தி ஊழியத்தில் ஆர்வமுள்ள சபைகள், விசுவாசிகள் தாங்கள் ஆதாயம் செய்தவர்களை சீஷர்களாக்க அறிந்திருக்க வேண்டும். நான் சுவிசேஷம் அறிவிக்கிறேன், நீ சீஷராக்கு என இரண்டு இலாகாவாக பணிபுரியும் அவலநிலை மாற வேண்டும். சீஷத்துவத்தைக் குறித்த தவறான புரிதல்களை அகற்ற வேண்டும். இன்று சீஷத்துவப் பயிற்சி அல்லது சீஷத்துவப் பணி சந்திக்கும் சவால்கள் என்ன என்பதைக் கண்டறிய வேண்டும். மொத்தத்தில் சீஷரை உருவாக்கும் முழுமையான நற்செய்தி ஊழியத்தைக் குறித்து ஒரு ஆத்தும ஆதாய வீரர் அறிந்துகொள்ள வேண்டியதைச் சுருக்கமாக விவாதிப்போம்.

இன்றைய நாட்களில் இரட்சிக்கப்படுகிறவர்கள் அல்லது புதிதாக சபைகளில் இணைகிறவர்களின் தரம் குறைய காரணம் என்ன? பெரும்பாலான மக்கள் இயேசு கிறிஸ்துவினால் அற்புதங்கள் பெற்றவர்கள்தான். ஆயினும் இரட்சிப்பு என்ற வாழ்க்கை மாற்றத்தை அவர்கள் அனுபவிக்கவில்லை. ஆகவே பரவச காலத்தில் அதாவது முதல் மூன்று மாதங்களில் சபைகளில் ஆர்வமாக கலந்து கொண்டவர்களில் அநேகர் விலகிச் சென்று விடுவார்கள்.

பொதுவாக சீஷத்துவப் பயற்சியெல்லாம் இரட்சிப்பை முதல் பாடமாக கொண்டே ஆரம்பிக்கிறது. உபதேசங்களை போதிப்பதில் அதிக சிரத்தை எடுக்கிறது. ஆனால் உண்மையில் சீஷத்துவ வழிகாட்டல்கள் நற்செய்தி ஊழியத்தின் போதே துவங்கிவிட வேண்டும். தவறினால் கூட்டம் கூட்டமாக சபைக்கு வருவார்கள். கிறிஸ்துவில் நிலைத்திருப்போர், கனிகொடுப்போர் என்போர் மிக சொற்பமான அளவிலே இருப்பார்கள்.

## I. இன்று சீஷத்துவம் பெரும்பாலும் புறக்கணிக்கப்படுகிறது

✫ ஏனென்றால், பிரதான கட்டளையின் தவறான புரிதலேயாகும். சீஷராக்கவே சுவிஷேசம் அறிவிக்க புறப்பட்டுப் போகச் சொன்னார் (மத்.28:19,20). ஆனால் சுவிஷேசம் அறிவிப்பதே பிரதான கட்டளையென்று சுருக்கிப்பார்க்கிறோம்.

✫ ஆகவே அறிவிக்க பயிற்சி பெறும் விசுவாசிகள், திரளான மக்களுக்கு நற்செய்தி சொன்ன திருப்தியில் நின்றுவிடுகிறார்கள். புதிய ஆத்துமாக்களுக்கு சீஷத்துவப் போதனைகள் எட்டாமல் போகிறது.

✫ சீஷத்துவத்தின் ஆழமான நிபந்தனைகளைக் கொண்டு சீஷராக்குகிற பணிசெய்பவர்கள் இது நீண்டகால வேலை நம்மால் இயலாது என தயங்குகிறார்கள் (மத்.16:24). சீஷராக வேண்டியவர்களோ இது கடினமான உபதேசம் யார் இதைப் பின்பற்றுவார்கள் எனக் கருதி பின்வாங்குகிறார்கள் (யோ. 6:66).

☆ ஒரு வருட கால அளவில் ஒரு புதிய விசுவாசி எந்த அளவு வளர வேண்டும் என்ற ஆரம்பகால போதனைகளை அறியாத நற்செய்தியாளர், தனது நம்பிக்கையை திணிப்பதில், தனது இன்றைய கால அனுபவங்களை திணிப்பதில், தனது சபை போதிக்கும் உபதேசங்களைத் திணிப்பதில் கவனம் செலுத்துகிறார். இந்தப் பரிசேய அணுகுமுறையை தாங்க முடியாத புதியவர்கள் ஓடிவிடுகிறார்கள் (மத். 23:4).

☆ பெற்றவர் ஒருவர், வளர்ப்பவர் மற்றொருவர் எப்படி இயற்கைக்கு முரணானதோ, அப்படித்தான் ஆத்தும ஆதாயம் செய்த ஆவிக்குரிய பெற்றோர் ஒருவர், வளர்ப்பவர் மற்றொருவர் என்று விட்டுவிடுவது அல்லது அது சபையின் வேலை என கருதுவதும் முரணான காரியமாகும். இந்த பாகப்பிரிவினை, சீஷத்துவத்தைக் கேள்விக்குறியாக்கிவிட்டது.

☆ சபைகளில் குறைந்த சதவீதத்தினர்தான் சுவிசேஷம் சொல்கிறார்கள். அவர்கள் ஆதாயம் செய்து கொண்டு வரும் கூட்டத்திலும், சீஷர் எனத் தகுதி பெறுவோர் மிகவும் சொற்பமானோரே.

☆ இன்றைய அவசர தேவை, நற்செய்தி ஊழியத்தைச் செய்கிறவர்கள், தாங்கள் ஆதாயம் செய்தோரை சீஷராக்க என்ன செய்ய வேண்டும் என்று கற்று அறிவதேயாகும்.

☆ சபைகளும், கூடும் கூட்டத்திலே மகிழ்ச்சியடைவது இயல்புதான். கூட்டம் சீஷராக மாறியதா என்பதே காரியம். இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றிய திரளானோர் உண்டு. அவர்களும் சீஷர்களும் என்றே அழைக்கப்பட்டார்கள் (லூக்கா 6:17). தெரிந்தெடுக்கப்பட்ட 70 பேர்களும் சீஷர்கள் என்றே அழைக்கப்பட்டார்கள் (லூக்கா 10:16). அப்போஸ்தல அழைப்பு பெற்று 12 பேரும் சீஷர்கள் என்றே அழைக்கப்பட்டார்கள் (லூக்கா 9:1). எனவே சீஷர் என்பதின் அர்த்தத்தை மிகக் கடினமாக்கி சீஷத்துவ பயிற்சியை, வாழ்க்கை முறையை கடினமாக்க வேண்டாம்.

☆ இயேசு கிறிஸ்து சீஷர்களை உருவாக்கியதில் காட்டிய அக்கறையில் அறிந்தால் **சீஷர்களை உருவாக்குவதே பிரதான பணி** என்ற ஆதிச்சபையின் நிலையை, **சபை** மீண்டும் அடையும்.

## II.ஒரு வருடத்தில் நீங்கள் மற்றொருவரை சீஷராக்குங்கள்

☆ கிறிஸ்துவைப் பிரகடனப்படுத்துவதே நற்செய்தி ஊழியம். D.L.மூடி திரள்கூட்ட பிரசங்கியான பிறகும் தனித்து தினசரி ஒருவருக்குச் சொல்லும் பிரதிஷ்டையைக் கைவிடவில்லை.

☆ நீங்களும் எதிர்படுவோருக்கு அறிவியுங்கள் (அப்.17:17). உங்கள் உறவுகளுக்கு அறிவியுங்கள் (மாற்கு 5:19). வருடத்தில் 10 பேரையாவது இரட்சிப்பிற்குள் நடத்த வேண்டும் என இலக்கு வைத்து செயல்படுங்கள் (சக. 8:23).

☆ ஆனால் இவைகளுக்கு மேலாக... நீங்கள் அறிவித்தவர்களிடமிருந்து ஒருவரை அல்லது ஆதாயம் செய்தோரிலிருந்து ஒருவரை தெரிந்தெடுத்து அல்லது சபை கொடுக்கும் ஒரு புதிய நபரை சீஷராக்க தீர்மானியுங்கள்.

☆ ஒருவர்தி னமும்செ ால்வதினால்வ ருடத்தில்3 65பே ருக்குந ற்செய்தி அறிவிக்கலாம். (நீங்கள் அப்படி பழகி இருந்தால் சொல்வதை நிறுத்திவிட வேண்டாம். வசன விதை என்றாகிலும் வேலை செய்யும்). ஆனால் ஒரு வருடத்தில் ஒருவரையாவது சீஷராக்க தீர்மானியுங்கள்.

☆ நீங்கள் ஒருவரை இரட்சிப்பிற்கு நடத்துவதோடு, இரட்சிப்பின் அனுபவத்தில் வளர்வதற்கான ஆரம்ப கால போதனைகளையும் அவருக்குக் கொடுங்கள். இயேசுவே ஆண்டவர் என்று அவர், சொல்லும் வரை இரட்சிப்பின் அனுபவம்

பெறும்வரை அவரை வழிநடத்துங்கள். பின்பு அவரை உங்களுடன் அழைத்துச் சென்று பிறருக்கு சாட்சி சொல்ல பழக்குங்கள். ஜெபிக்க, வேதம் வாசிக்க பழக்குங்கள்.

☆ அடுத்த வருடத்திலும் சங்கிலி தொடர் போல நீங்களும் இருவரும் வேறு இருவரை சீஷராக்கும் ஊழியத்தைச் செய்யுங்கள். 13 வருடங்களில் நீங்கள் உங்கள் ஊரையே அசைத்துவிடுவீர்கள்.

☆ தினமும் ஒருவர் வீதம் வருட முழுவதும் அறிவித்தால் 365 பேருக்கு அறிவிக்கலாம். 13 வருடங்கள் அப்படி ஒருவர் ஊழியம் செய்தால் 4745 பேருக்கு அறிவித்துவிடலாம்.

☆ ஆனால் நீங்கள் ஒருவரை சீஷராக்கும் இலக்கில் ஊழியம் செய்தால், 13 வருடங்களில் 8192 சீஷர்களை உருவாக்கியிருப்பீர்கள். உங்கள் வாழ்நாளில் 8192 கூட அல்ல ஒருவரை சீஷராக்கினாலே அதன் பலனை விவரிக்க இயலாது. நற்செய்தியாளர்களே! **அறிவியுங்கள், ஆதாயம் செய்யுங்கள், சீஷராக்குங்கள்.**

- தொடர்ந்து விவாதிப்போம்.

## சீஷத்துவ நோக்கம் கொண்ட தனியாள் ஊழியப் பலன்கள்

| | சீஷத்துவ நோக்கமற்ற விளைவுகள் | சீஷத்துவ நோக்கம் கொண்ட வெறும் அறிவித்தலின் தனியாள் ஊழியப்பலன்கள் |
|---|---|---|
| 1. (1+1) வது வருட இறுதியில் | 365 | 2 |
| 2-வது வருட இறுதியில் | 730 | 4 |
| 3-வது வருட இறுதியில் | 1095 | 8 |
| 4-வது வருட இறுதியில் | 1460 | 16 |
| 5-வது வருட இறுதியில் | 1825 | 32 |
| 6-வது வருட இறுதியில் | 2190 | 64 |
| 7-வது வருட இறுதியில் | 2555 | 128 |
| 8-வது வருட இறுதியில் | 2920 | 256 |
| 9-வது வருட இறுதியில் | 3285 | 512 |
| 10-வது வருட இறுதியில் | 3650 | 1024 |
| 11-வது வருட இறுதியில் | 4015 | 2048 |
| 12-வது வருட இறுதியில் | 2048 | 4096 |
| 13-வது வருட இறுதியில் | 4745 | 8192 |

## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால், உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ. **1,00,000** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.

ஆசிரியர்



# உயிர்மீட்சியே நமது தேவை

**பாகம் : 4**

**Rev. Dr. L. ஜெயபாலன்**

கொடைக்கானல்



உயிர்மீட்சியின் அனுபவம் மிக முக்கியமானதாகும். இல்லாவிடில் கிறிஸ்தவ வாழ்க்கை எந்த வித ஆவிக்குரிய முன்னேற்றமில்லாமல், ஒரு குளிர்ந்த நிலையில் நாட்கள், வருடங்கள் வீணாக கழிந்துவிடும்.

நான் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து கண்டிப்பான சூழ்நிலையில் வளர்ந்தேன். மூன்று வயதில் தாத்தா பாட்டி வீட்டில் பாகப்பிரிவினையினிமித்தம் வளர்ந்தேன். அவர்கள் கத்தோலிக்க சபையைச் சேர்ந்தவர்கள். மிக செல்லமாக வளர்ந்து, பெற்றோருக்கு கீழ்படியாத பிள்ளையாக வளர்ந்தேன். பெற்றோர்கள் எனக்காக ஜெபித்தனர். கண்டிப்புடன் வளர்க்க முயற்சி செய்து வீட்டிற்கு அழைத்துச் சென்றனர்.

“பாரம்பரியம் சூழ்நிலையால் உருவாக்கப்பட்டவனே மனிதன்” (Man is the product of heredity and environment) என உளவியலில் படித்த வண்ணம் என் வாழ்க்கை மாற ஆரம்பித்தது. வீட்டிலே “எல்லாம் இயேசுவே” என்று பாடிய நான் வெளியே சென்றவுடன், “டிங்கரி டிங்காலே” என பாட ஆரம்பித்தேன். பெற்றோர்கள் எனக்கு “கெட்டக்குமாரன்” என பெயரிட்டனர். 1962-ம் ஆண்டு, எனது 16-வது வயதில் ‘‘கடவுளைத் தேடவேண்டும் என தீர்மானித்தேன்’’ என்று எனது நாட்குறிப்பில் எழுதி வைத்தேன்.

என்னை பெற்றோர்கள் தாயின் வயிற்றில் இருக்கையில் கடவுளுடைய திருப்பணிக்கு அர்ப்பணம் செய்தார்கள். 1964-ம் ஆண்டு பெங்களூரிலுள்ள AG வேதகல்லூரிக்கு SABC பயிலச் சென்றேன். **St.அகஸ்டின்** என்பவர், “மீட்கும் கிருபை, காக்கும் கிருபை, வழிநடத்தும் கிருபை” என்று கூறினார். அது என்னுடைய வாழ்வில் அமைந்தது என்று தான் சொல்ல வேண்டும்.

வேத கல்லூரியில் என்னை கர்த்தருக்கு (1964) முழுமையாய் அர்பணித்தேன். 1966-ம் ஆண்டு பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற்றேன். 1967-ம் ஆண்டு கல்லூரியில் முழுக்கு ஞானஸ்நானம் பெற்றேன். 1968 முதல் இன்று வரை, முழுநேர ஊழியராக போதித்தல், பிரசங்கித்தல், சாட்சி பகருதல் போன்றவைகளில் வாழ்க்கையில் AG ஸ்தாபனத்தில் கழித்து வருகின்றேன். 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம், மதுரையிலுள்ள AG வேதாகம கல்லூரியில் ஆசிரியராக, கமிட்டியால் நியமிக்கப்பட்டேன். எனது ஆவிக்குரிய வாழ்விற்கு அது மிகவும் பிரயோஜனமாக இருந்தது.

**சார்லஸ் பின்னி. டி.எல்.மூடி, ஹட்சன் டெய்லர். அடோனிராம் ஜட்சன், டேவிட் லிவிங்ஸ்ட்டன்** போன்றவர்களின் வாழ்க்கை வரலாறு எனக்குள்ளே ஆத்மீக தாகத்தை உண்டுபண்ணியது. வாரத்தில் ஒரு நாள் உபவாசித்தல், தினமும் வேதம் வாசித்து ஜெபித்தல் இவைகளில் எனது நேரத்தை செலவழித்தேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். கடவுள் எனக்குள்ளே ஒரு உயிர்மீட்சியை ஏற்படுத்தினார். அதினால் ஏற்பட்ட காரியங்கள் உங்களுக்கு உபயோகமாக இருக்கும் என நம்புகிறேன்.

**பரம பிதாவின் மேல் அன்பு :**

எனக்குள்ளே நாம் எல்லோருக்கும் தகப்பனாக இருக்கும் கடவுள் மேல் மெய்யான அன்பு ஏற்பட்டது. இயேசு கிறிஸ்து எனக்காகச் செய்த தியாகம் நிலைத்து மனம் கசந்து அழுதேன். “என் இயேசுவே உம்மையே நான் நேசிக்கிறேன்” என்ற ஆங்கில பாடலையும், “அன்னை அன்பிலும் விலை, இயேசுவின் தூய அன்பே” போன்ற பாடல்களையும் அடிக்கடி ஜெபத்தில் பாட ஆரம்பிதேன்.

**பெற்றோர், குடும்பத்தார், பிறர்மேல் அன்பு :**

எங்களுக்கு எதிரிகளாக பாகப்பிரிவினையின் நிமித்தம் இருந்தவர்களிடம் அன்பு காட்ட கடவுள் உதவினார். எல்லா மக்களையும் தெய்வீக அன்பில் உற்றுநோக்க ஆண்டவர் உதவினார். அவர்களுடைய ஆவிக்குரிய காரியங்கள்மேல் வாஞ்சையாயிருக்க உதவினார். “உன்னைப் போல பிறரை நேசி” என் இயேசுவின் போதனை என்னில் ஆழமாய் கிரியை செய்தது.

**பரிகாரம் :**

எனது பெற்றோர்களிடம் சிறுபிராயத்தில் செய்த தவறுகள் மற்றும் பேசிய பொய்களுக்கு மன்னிப்புக் கோரினேன். 1969-ம் ஆண்டு நான் செய்த தவறுக்கு தந்தையிடம் மன்னிப்புக் கேட்டேன். 1959-ம் ஆண்டு ஒரு நாள் கொடைக்கானலில் மூஞ்சிக்கல் என்ற இடத்தில் இருந்த ‘லட்சுமி விலாசில்’ ஒரு தோசை சாப்பிட்டு விட்டு கை கழுவச் வெளியே செல்கையில் 10 காசு கொடுக்காமல் சென்றுவிட்டேன். மறுதடவை திட்டம்போட்டு, கைகழுவச் செல்வது போல் நழுவிச்சென்றேன். 1969-ம் ஆண்டு அந்த ஹோட்டலுக்குச் சென்று, உண்மையைச் கூறி பாரிகாரமாக இரண்டு ரூபாய் கொடுத்தேன். இதைப் பார்த்த ஒருவர் 10 வருடங்களுக்கு முன்பாக ஏமாற்றியதற்கு பரிகாரமாக நீங்கள் செய்ததை வரலாறு எழுதலாம் என கூறினார். எனது சாட்சியினால் அநேகர் தொடப்பட்டு அவர்களும் பரிகாரம் செய்தனர்.

பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற, குடும்ப பிரச்சனைகளுக்கு ஆலோசனை பெற 0-94434 74921 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும்.

---

**உங்களுக்குத் தெரியுமா?**

*உலகம் முழுவதும்*

- ஒரு நிமிடத்திற்கு 105 பேர் மரிக்கிறார்கள்
- ஒரு நாளைக்கு 1,51,000 பேர் மரிக்கிறார்கள்
- ஒரு ஆண்டில் 5 கோடியே 53 லட்சம் பேர் மரிக்கிறார்கள்
- இதில் 6% மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்களாய் இருக்கிறார்கள்
- ஒரு நிமிடத்திற்கு 9 விசுவாசிகளும் 147 அவிசுவாசிகளும் மரிக்கிறார்கள்.

**ஒரு நிமிடத்திற்கு 80 பேர் இயேசு இல்லாமல் நித்திய அழிவுக்குப் போகிறார்கள்**

உங்கள் பங்கு என்ன?

நற்செய்தி அறிவிக்கப் பயிற்சி பெறுங்கள்! ஊழியம் செய்யுங்கள்

*Jesus said, "Go into all the world" (Mk 16:15)*
*The world begins where your frontyard ends*



# ஆவிக்குரிய காரியங்களை அலட்சியம் பண்ணாதிருங்கள்

**Rev. V.J. பாலஸ்**

தலைமைப் போதகர், சிமிர்னா A.G. சபை, வண்ணாரப்பேட்டை

பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

கிருபையையும் சமாதானத்தையும் உங்கள் வாழ்க்கையில் தேவன் பெருகச் செய்வாராக!

**ஆதியாகமம் 25:24-34** ஆகிய வசனங்களையும் தியானிப்போம். இங்கே யாக்கோபு மற்றும் ஏசாவைக் குறித்துச் சொல்லப்பட்டுள்ளது. ஏசா யாக்கோபு இவர்கள் இருவரும் ஏகசகோதரர்களாக இருந்தாலும் ஒருவன் ஆவிக்குரியவனாகவும் இன்னொருவன் மாம்சத்திற்குறியவனாகவும் இருந்தான். இந்த யாக்கோபைக்குறித்து இரண்டு காரியங்கள் சொல்லப்பட்டுள்ளது, ஏசாவைக் குறித்தும் இரண்டு காரியங்கள் சொல்லப்பட்டுள்ளது.

**ஆதியாகமம் 25:27 "ஏசா வேட்டையில் வல்லவனும் வனசஞ்சாரியுமாய் இருந்தான்; யாக்கோபு குணசாலியும் கூடாரவாசியுமாய் இருந்தான்"** என்று சொல்லப்பட்டுள்ளது. யாக்கோபு கூடாரவாசியாயிருந்து வீட்டில் தாயோடு இருந்து தாய்க்கு உதவி செய்து கொண்டிருந்தான். தங்கியிருந்து ஜெபித்து வேத வசனங்களுக்கு கீழ்படியும்போது நல்ல குணசாலிகளாக மாறமுடியும். சபை கூடிவருதலைவிட்டு விடாமல் எல்லா கூட்டங்களுக்கும் வாஞ்சையோடு வருபவர்கள் கீழ்படிகிறவர்களாகவும் நல்ல குணசாலிகளாகவும் இருப்பதை நாம் பார்க்க முடியும். ஏசாவைக் குறித்து வனசஞ்சாரி என்று சொல்லப்பட்டுள்ளது.

சஞ்சரிப்பது என்பது சிலர் தேவனை ஆராதிப்பதை அசட்டை செய்துவிட்டு இந்த உலகப் பிரகாரமான காரியங்களில் ஈடுபட்டு வீணான இடங்களுக்கு அலைந்து திரிவார்கள். தங்கள் இஷ்டப்படி தங்களுக்கு விருப்பமானதை செய்வார்கள். ஆனால் அப்படியிராமல் நாம் யாக்கோபைப் போல கூடாரத்தில் (தேவனுடைய வீட்டில்) நிலைத்திருந்து அவருடைய வேதத்தை தியானிக்கும்போது அந்த வேதம் நம்முடைய வாழ்க்கையை மாற்றுகிறது. இந்த வேத வசனத்திற்கு ஜீவன் இருக்கிறது. இது நம்முடைய பழக்க வழக்கங்களை மாற்றிவிடுகிறது. தேவனுடைய ஆலயத்தில் தங்கியிருப்பது அவரை ஆராதிக்க வேண்டும். வாரத்தில் ஒருநாள் அல்ல தினந்தோறும் தேவனை ஆராதிக்க வேண்டும். அப்போஸ்தலருடைய நடபடிகளில் இடைவிடாமல் ஆராதனை, ஜெபம் ஊழியம் நடைபெற்றதை நாம் காண முடியும்.

ஏசா தகப்பனுக்கு பிரியமானவன். தகப்பனுக்குப் பிரியமான வேட்டை இறைச்சியைக் கொண்டு வந்து கொடுக்கிறவனாயிருந்தான். ஈசாக்கு தேவனுடைய மனிதனாக இருந்தாலும் அவனுக்குள் இந்த பலவீனம் இருந்தது. விசுவாசிகள் சாப்பாட்டுக்கு அடிமையாயிருக்கக்கூடாது. அதிகமாக சாப்பிடுவது அநேக வியாதிகளுக்கு காரணமாக இருக்கிறது. இந்த ஏசா தகப்பனுக்கு பிரியமானவனாக இருந்தான். யாக்கோபு தாய்க்கு பிரியமானவனாக இருந்தான். இதுவே அநேக

பிரச்சனைகளுக்கு காரணமாக இருந்தது. ஆகவே பெற்றோர்கள் தங்கள் வீட்டில் எத்தனை பிள்ளைகள் இருந்தாலும் எல்லாரையும் பட்சபாதமில்லாமல் ஒன்றுபோல நேசிக்க வேண்டும். ஒரு பிள்ளை சரியில்லாமல் இருந்தால் கணவன் மனைவி சேர்ந்து அந்த பிள்ளையை சரிப்படுத்த வேண்டும்.

**"அதற்கு ஏசா : இதோ, நான் சாகப்போகிறேன். இந்தச் சேஷ்ட புத்திரபாகம் எனக்கு என்னத்திற்கு என்றான்" (ஆதியாகமம் 25:32).** சேஷ்டபுத்திரபாகம் எனப்படுவது மூத்தவனுக்கு கிடைக்கிற இரண்டு மடங்கு ஆசீர்வாதம். அதுபோல தேவனுடைய பிள்ளைகளுக்கு தேவன் இரண்டு மடங்கு ஆசீர்வாதத்தைக் கொடுக்கிறார். யாக்கோபு கூழ் சமைத்துக் கொண்டிருக்கும்போது ஏசா பசியோடு அங்கு வந்தான். அந்த பயற்றங்கூழ் ஏசாவுக்கு சிவப்பாக கவர்ச்சியாக தெரிந்தது. அங்கே ஏசா தன்னுடைய சேஷ்ட புத்திரபாகத்தை அலட்சியம் பண்ணி அதை விற்றுப்போட்டு அந்த பயனற்ற கூழைக் குடித்தான். அதுபோல இன்றைக்கு அநேகர் இம்மைக்குரிய உலக நன்மைகளுக்காக இனிவரப்போகிற நித்திய ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அலட்சியம் பண்ணுகிறார்கள்.

யாக்கோபு ஆசீர்வாதத்தைப் பெற முந்திக்கொண்டான். நாம் தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெறவேண்டுமானால் முந்திக்கொள்ள வேண்டும். யாக்கோபு ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டு புறப்பட்டுபோன பின்பு ஏசா வந்தான். அவன் தன் தகப்பனிடத்தில் தன்னை ஆசீர்வதிக்கும்படி கேட்டான். ஈசாக்கு திகைத்து யாக்கோபு வந்து அனைத்து ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்டானே என்று கூறினான். ஏசா தன்னை ஆசீர்வதிக்கும்படி கண்ணீர்விட்டுக் கதறினான். ஆனாலும் அவன் தகப்பனுடைய மேன்மையான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. **"ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்துபோகாதபடிக்கும் யாதொரு கசப்பான வேர் முளைத்தெழும்பிக் கலக்கமுண்டாக்குகிறதினால் அநேகர் தீட்டுப்படாதபடிக்கும், ஒருவனும் சேஷ்டபுத்திர பாகத்தை விற்றுப்போட்ட ஏசாவைப்போலச் சீர்கெட்டவனாகவும் இராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள். ஏனென்றால் பிற்பாடு அவன் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ள விரும்பியும் ஆகாதவனென்று தள்ளப்பட்டதை அறிவீர்கள்; அவன் கண்ணீர்வீட்டு, கவலையோடே தேடியும் மனம் மாறுதலைக் காணாமற்போனான்"** (எபிரெயர் 12:15-17).

ஆகவே இதை வாசிக்கிற நீங்கள் இந்த காலத்திலே ஆராதனை, ஜெபம், ஊழியம் ஆகிய தேவனுடைய காரியங்களை அலட்சியம் செய்வீர்களானால் பிற்பாடு நீங்கள் கண்ணீர் விட்டு அழவேண்டிய காலம் வரும். தேவனுடைய பிள்ளைகளே, உங்களுக்கு நல்ல பெலன் ஆரோக்கியம் இருக்கும்போது தேவனுக்கடுத்த காரியங்களை அதிகமாக தேட வேண்டும். ஆராதனை, ஜெபம், ஊழியம், ஆத்தும ஆதாயம் இதிலே முந்திக்கொள்ள வேண்டும். யாக்கோபு முந்திக்கொண்டான். அதுபோல நீங்களும் ஆண்டவருக்கென்று நற்கிரியை செய்வதில் முந்திக்கொள்ள வேண்டும். அப்பொழுது யாக்கோபைப்போல நீங்களும் உலகத்திற்குரிய ஆசீர்வாதங்களையும் உன்னதத்திற்குரிய ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்வீர்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

---

*The Will of God*

To know the will of God is the greatest knowledge,
To find the will of God is the greatest discovery, and
To do the will of God is the greatest achievement.
- George W.Truett.



# புறஜாதியார் நம்பிக்கை வைக்கும் கிறிஸ்துவின் செய்தி

Rev. A. எட்வின் பிரபாகர்
துணை இயக்குநர், தமிழ் பிரதேச மிஷனரி ஊழியங்கள்

**"அவரிடத்தில் புறஜாதியார் நம்பிக்கைவைப்பார்கள்" (ரோமர் 15:12).**

**"அவருடைய செய்தியை அறியாதிருந்தவர்கள் காண்பார்கள், கேள்விப்படாதிருந்தவர்கள் உணர்ந்துகொள்வார்கள்" (ரோமர் 15:20).**

பரிபூரண ஜீவன் வாசகர்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். தமிழ் பிரதேச மிஷன் ஊழியத்தின் சார்பில் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

பாரத தேசத்தில் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு வெளியே நூறு கோடிக்கும் மேற்பட்ட ஜனம் உண்டு. அவர்களுக்கு தேவைப்படும் செய்தி கிறிஸ்துவின் சுவிசேஷ செய்தியாகும். சுவிசேஷமே வல்லமையுள்ளது. பாவ உணர்வு உண்டுபண்ணக் கூடியது. ஆத்துமாக்களை இரட்சிக்கக்கூடியது, சுவிசேஷத்தை கிறிஸ்துவின் செய்தி என்று பவுல் அப்போஸ்தலன் ரோம சபைக்கு குறிப்பிடுகிறார். பவுல் அப்போஸ்தலன் ரோமர் 15:19-ன்படி ரோம சாம்ராஜ்யம் முழுவதும் சுவிசேஷத்தை பூரணமாய் பிரசங்கித்தார். அதுதான் நம் ஒவ்வொருவருடைய பிரதான கடமையாகும்.

## கிறிஸ்துவின் செய்தியை அறியாதிருந்தவர்கள் காண்பார்கள் (ரோமர் 15:20)

நம் தலைமுறையில் இந்தியாவின் ஜனங்கள் கிறிஸ்துவின் செய்தியை அறியாதவர்களாகவே இருந்துவிட போவதில்லை. நம் ஒவ்வொருவருக்கும் வடமாநில தரிசனமும், பாரமும் பெற்று ஜெபிக்கவும், போய் அறிவிக்கவும் செயல்படவும் ஆரம்பித்து விட்டால் அறியாதிருந்தவர்கள் காண்பார்கள் என்ற வேதவாக்கு பரிபூரணமாய் நிறைவேறும். இந்தியா நேசரை கண்டுகொள்ளும். பவுல் அப்போஸ்தலன் ரோமர் 10:14,15-ல் அனுப்பப்படாவிட்டால் எப்படி பிரசங்கிப்பார்கள்.? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படி கேள்விப்படுவார்கள்? அவரைக் குறித்து கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்.

சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களை சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று சுவிசேஷமாகிய கிறிஸ்துவின் செய்தியை அறிவிக்க வேண்டியதின் அவசியத்தையும், அவசரத்தையும், தேவையையும் சுட்டிக் காட்டுகிறார். கிறிஸ்துவின் செய்தியை அறிவிக்க வடமாநிலங்களுக்கு வீறுகொண்டு, எழும்பி போய் செயல்படுவோமாக! நாமும் நமது பிள்ளைகளும் அர்ப்பணத்தோடு எழுந்து செயல்படுவோமாக! கிறிஸ்துவின் செய்தியை அறியாதவர்கள் காணட்டும், அன்பின் இரட்சகர் இயேசுவை தங்கள் வாழ்வில், ஆத்துமாவில் இயேசுவின் இரட்சிப்பை பெற்று நித்தியவாசிகளாக மாறட்டும். பாரதமும் முழுமையாக மாறட்டும். சுவிசேஷத்தின் ஒளி, உலகில் வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற இயேசுவின் ஒளி இந்தியாவை பிரகாசிக்கச் செய்யும்.

## கேள்விப்படாதிருந்தவர்கள் உணர்ந்துகொள்வார்கள் (ரோமர் 15:20).

ஒவ்வொரு விசுவாசியும் சுவிசேஷ போர்வாளாக கிறிஸ்துவின் செய்தியை அறிவிக்க எழும்பி செயல்பட ஆரம்பித்துவிட்டால் இந்தியாவில் தனிமனிதனும், மனுஷியும் கேள்விப்படும் சுவிசேஷம் எத்தனை மாற்றத்தை கொண்டுவரும்.

சிந்திக்க கேட்கிறேன். ரோமர் 10:17-ன்படி விசுவாசம் கேள்வியினாலே வரும் என்று வேதம் கூறுகிறது. கேள்விப்படும் சுவிசேஷம் பெரிய இரட்சிப்பை உண்டாக்கும். தனி மனிதனுக்குள் இயேசுவைப் பற்றிய விசுவாசத்தை உண்டாக்கும். வளரும், பெருகும், இந்தியாவே மறுரூபப்படும்.

என் தேச ஜனம், வடமாநில ஜனம் கேள்விப்படாதவர்களாக வாழ்வை முடித்துவிடக்கூடாது. ஆண்டவரே! 138 கோடி ஜனங்களும் கேள்விப்பட வேண்டும். விசுவாசிக்க வேண்டும், இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள வேண்டும், சபைக்குட்பட வேண்டும். நித்தியத்திற்குட்பட வேண்டும். இது நம் ஜெபமாகட்டும்! செயலாகட்டும்!. முடித்திட வேண்டிய பணியாகட்டும். கேள்விப்படாதிருந்தவர்கள் உணர்ந்துகொள்வார்கள். ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

**கிறிஸ்துவினிடத்தில் புறஜாதியார் நம்பிக்கை வைப்பார்கள் (ரோமர் 15:12)**

இது ஜீவ வாக்கு. இவ்வாக்கு, நிச்சயம் நிறைவேறும். கிறிஸ்துவின் செய்தியை அறியாதிருந்தவர்களுக்கும் நாம் அறிவித்து, பணியைநிறைவேற்றும்போது, புறஜாதியார் கிறிஸ்துவினிடத்தில் நிச்சயம் நம்பிக்கைவைப்பார்கள் என்ற வார்த்தை பூரணமாய் நிறைவேறும். இந்தியா தேவாசீர்வாதம் பெறும், எழுப்புதல் அடையும். பெரிய அறுவடை உண்டாகும்.

அப்போஸ்தலர் 16-ம் அதிகாரத்தில் சிறைச்சாலையில் பவுலும், சீலாவும் காவலில் வைக்கப்பட்டபோது தேவ செயலை கண்ட சிறைச்சாலைக்காரனும், அவன் வீட்டாரும் சுவிசேஷ வசனத்தை கேட்டபோது, தன் வீட்டார் அனைவரோடு விசுவாசமுள்ளவனாக மாறினானே! மனமகிழ்ச்சியாய் மாறினானே! (அப். 16:32.33,34). இந்த கிறிஸ்துவின் செய்தி சிறைச்சாலைக்காரன் குடும்பத்தை மாத்திரமல்ல, நம் குடும்பங்களையும், இந்தியாவின் அனைத்து குடும்பங்களையும் கிறிஸ்துவின் நாமத்தை பற்றும் விசுவாசத்திற்குள்ளே கொண்டு வருவது திண்ணம்! கிறிஸ்துவின் செய்தி, வட மாநிலங்களையும், முழு இந்தியாவையும் விசுவாசத்திற்குள் கொண்டுவரும்.

இந்தியாவின் இரட்சிப்பிற்காய் ஜெபிப்போம்!
இந்தியாவின் எல்லையெங்கும் அறிவிப்போம்!
இந்தியாவின் சுவிசேஷ மிஷன் வேலையை தாங்குவோம்!

இந்தியர்கள் (புறஜாதிகள்) கிறிஸ்துவினிடத்தில் நம்பிக்கை வைப்பார்கள் என்ற தேவ வார்த்தை பரிபூரணமாய் நிறைவேறும். தேவன் தாமே நம் அனைவரையும், வடமாநில ஊழியங்களில் ஆசீர்வாதமாக்குவாராக! கர்த்தராகிய இயேசு உங்களையும், உங்கள் குடும்பங்களையும் ஆசீர்வதிப்பாராக! ஆமென்! அல்லேலூயா!

---

*5 Dimensions of Church Growth*

Churches grow warmer through *fellowship*
Churches grow deeper through *discipleship*
Churches grow stronger through *worship*
Churches grow broader through *ministry*
Churches grow larger through *evangelism*

*Dr. Rick Warren*

---

# தமிழ் பிரதேச மிஷனரி இயக்க அறிக்கை

## மிஷன் கன்வென்ஷன்

கடந்த அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் நாசரேத், கரூர், விருதுநகர், திருப்பூர், ராம்நாடு, ராதாபுரம், நீலகிரி ஆகிய மண்டலங்களில் மிஷன் கன்வென்ஷன் நடைபெற்றது. மண்டலத் தலைமைப் போதகர்களின் ஒத்துழைப்போடு கூட அந்தந்த மண்டல மிஷன் பொறுப்பாளர்கள் சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தார்கள்.

## மிஷன் பிரயாணங்கள்

கடந்த அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் நமது தமிழ் பிரதேச போதகர்கள், குடும்பமாக, சபையாக, மண்டல போதகர்களாக, பிராந்தியவாரியாக, பீகார், ராஜஸ்தான், ஹரியானா, டெல்லி, குஜராத், மகாராஷ்ட்ரா, அஸ்ஸாம், நாகலாந்து ஆகிய மாநிலங்களுக்கு சென்று 12 மணி நேர தொடர் ஜெபங்கள் மற்றும் 2 நாட்கள் மிஷனரி கருத்தரங்குகளை நடத்தி, அங்குள்ள சபைகளையும், ஊழியர்களையும் சந்தித்து உற்சாகப்படுத்தி வந்துள்ளனர்.

## ஜெப விண்ணப்பங்கள்

❖ நமது தமிழ் பிரதேசத்தின் மூலம் தாங்கி வருகிற சுமார் 600க்கும் மேற்பட்ட மிஷனரிகளின் குடும்பங்கள் பாதுகாக்கப்பட, ஊழியங்கள் ஆசீர்வதிக்கப்பட.

❖ இந்த புதிய ஆண்டில் நமது மிஷன் பணித்தளங்களில் கர்த்தர் புதிய வாசல்களை திறந்து தர.

❖ நமது சபைகள் இல்லாத மாவட்டங்கள், மாநிலங்கள், அண்டை மாநிலங்கள், அண்டை நாடுகளில் ஊழியங்கள் ஆரம்பிக்கப்பட.

❖ நமது மிஷன் பணித்தளங்களில் சபைக்கான இடங்கள் வாங்கப்பட, இடம் உள்ள பகுதிகளில் சபைகள் கட்டப்பட, போக்குவரத்து வசதி இல்லாத பணித்தளங்களில் மிஷனரிகளுக்கு இருசக்கர வாகனங்கள் வாங்கிக்கொடுக்கப்பட.

❖ மிஷன் இயக்க மத்திய, பிராந்திய மற்றும் மண்டலத் தலைவர்களுக்காக

❖ இந்த ஆண்டு அநேகர் மிஷனரிகளாக செல்ல தங்களை அர்ப்பணிக்க, புறப்பட்டு செல்பவர்களை தாங்குகிற சபைகள் எழும்ப ஜெபிப்போம்.

## காபு மக்களினத்திற்காக ஜெபியுங்கள்

**மக்கள் இனம்** : காபு

**மொழி** : தெலுங்கு

**மக்கள் தொகை** : 1,51,24,000.

**கிறிஸ்தவர்கள்** : 0.01%

**நம்பிக்கை** : காபு இன மக்களில் அதிகமானோர் இந்துக்களாகவும், சிலர் இஸ்லாமிய மதத்தையும் பின்பற்றுகின்றனர். இவர்கள் விவசாயத்தையும், விவசாயம் சார்ந்த கடவுள்களையும் தெய்வமாக வழிபடுகின்றனர்.

**அதிகம் வாழும் பகுதி** : ஆந்திரபிரதேசம். தெலுங்கானா, கர்நாடகா.

**தத்தெடுத்துள்ள மண்டலம்** : அம்பாசமுத்திரம்

## மிஷனரிகளின் பணித்தள சாட்சிகள்

கர்த்தருடைய நாமத்திற்கு மகிமை உண்டாவதாக. நான் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்திருந்தாலும், கிறிஸ்துவை உள்ளத்தில் ஏற்றுக்கொள்ளாதவனாய் உலக வாழ்க்கைக்கு அடிமைப்பட்டிருந்தேன். 1999-ம் ஆண்டு என் தகப்பனார் இறந்துவிட்டார். நம்பிக்கையற்ற நிலைமையில் தற்கொலை செய்துகொள்ள தீர்மானித்தேன். என் தாய் மற்றும் உடன் பிறந்தவர்கள் நிமித்தம் தற்கொலை முடிவை மாற்றிக்கொண்டேன். 2005-ம் ஆண்டு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு என் பாவங்களை அறிக்கை செய்துவிட்டுவிட்டேன். பரிசுத்த ஆவியானவர் உதவி செய்தார். 2014-ம் ஆண்டு வேதாகமக் கல்லூரி படிப்பை முடித்து, அதே ஆண்டு மிசோராம், சம்பாய் என்ற பகுதியில் ஊழியத்தை தொடங்க கர்த்தர் உதவி செய்தார். இப்பொழுது எங்கள் சபைக்கு சுமார் 120 பேர் வருகிறார்கள். 60 பேர் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றுள்ளனர். புதிய ஆத்துமாக்களை தேவன் தருகிறார். கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக **-காம் கான் தாங், மிசோராம்.**

நான் ஒரு இந்து குடும்பத்தில் பிறந்தேன். குடும்ப முறைமைபடி பல தெய்வங்களை வணங்கி கொண்டிருந்தேன். மனதுக்கு நிம்மதி இல்லாமல் விரக்தியுடன் காணப்பட்டேன். ஒருநாள் எனது மாமா அவருடைய சபையின் போதகரிடம் என்னை அழைத்துச் சென்றார். அப்போதகர் தேவ அன்பை எனக்கு விவரித்து சொன்னார். என் பாவங்களை மன்னிக்க இயேசு கிறிஸ்துவால் மட்டுமே முடியும் என அறிந்துகொண்டேன். என்னை அர்ப்பணித்தேன். கிறிஸ்துவை மெய் தேவனாக ஏற்றுக்கொண்ட பின்பு எனக்கு பெரிய சமாதானம் கிடைத்தது. ஊழியத்திற்கு அர்ப்பணித்து வேதாகமக் கல்லூரி படிப்பை படித்த பின்பு 2018ம் ஆண்டு ஜுன் மாதம் என் ஊழியத்தை ஆரம்பித்தேன். இப்பொழுது சபைக்கு 18 பேர் வருகிறார்கள். புதிய ஆத்துமாக்களை கர்த்தர் தந்து அற்புதங்களை செய்கிறார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக **-சலாம் தினேஷ் மெய்தேவ், வாங்கூ, மணிப்பூர்.**

### மேற்கூறிய மிஷனரிகளை தாங்கும் மண்டலம் : சேலம்

நமது மிஷனரிகளுக்கு கிறிஸ்துமஸ் பரிசு கொடுப்பதற்காக காணிக்கைகளை சேகரித்து, அனுப்பித் தந்த அனைத்து சபையாருக்கும், போதகர்களுக்கும் இதயப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்

இவண் : தமிழ் பிரதேச மிஷனரி இயக்கம்

### உங்கள் இதயத்தை பாதுகாக்க சில வழிகள்

- தினமும் குறைந்தது 30 நிமிடங்கள் நடக்க பழகுங்கள்.
- புகைபிடிக்கும் பழக்கம் இருந்தால் அதை நிறுத்துங்கள்.
- உங்கள் உயர் இரத்தம் அழுத்தம் மற்றும் சர்க்கரை நோய் போன்ற உடல் நல கோளாறுகளை மருத்துவரின் உதவியுடன் சீராக்குங்கள்.
- அதிக உடல் எடை இருப்பின் உணவுகட்டுப்பாடு மற்றும் உடற்பயிற்சியின் மூலம் உடல் எடையை குறையுங்கள்.
- நாற்சத்து, தாது சத்துக்கள் (பழங்கள் மற்றும் காய்கறிகள்) நிறைந்த உணவை உட்கொள்ளுங்கள்.
- எண்ணெயில் பொறிக்கப்பட்ட, துரித உணவுகள் (Fast foods), மட்டன், மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி, Cheese, நெய், கொழுப்பு நிறைந்த பால், ஐஸ்கிரீம்களை உணவில் தவிர்த்து விடுங்கள்.
- கொழுப்பு சத்து குறைக்கப்பட்ட பால் பருகுங்கள். முட்டையின் மஞ்சள் கரு, இறைச்சியில் கல்லிரல், முளை போன்ற பகுதிகளை உணவில் தவிர்த்துவிடுங்கள்.
- மிதமாக காபி அருந்துங்கள். 2-3 Cupகளுக்கு மேல் வேண்டாமே.
- எதற்கும் பதட்டப்படாத அமைதியான மனநிலையை உடையவராயிருங்கள்
- தேவ நம்பிக்கையோடு வாழுங்கள்.

Dr.ஆண்டனி ஆரோக்கியராஜ், திருச்சி.



# அக்கரை நோக்கி ...

**Rev. R. தாசையா**
தேனி மண்டல தலைமை போதகர்

மத்தேயு 14:22-ல் இயேசு ஜனங்களை அனுப்பிவிடுகையில், தம்முடைய சீஷர்கள் படகில் ஏறி, தமக்கு முன்னே அக்கரைக்குப் போகும்படி அவர்களைத் துரிதப்படுத்தினார். இந்த உலகம் என்கிற இக்கரையை விட்டு, பரலோகம் என்கிற அக்கரைக்கு நாம் செல்ல ஆயத்தமாக வேண்டும். இயேசுவின் வருகையின் காலத்தில் வாழ்கிறோம். நமக்கு முன்னே எத்தனையோ பரிசுத்தவான்கள் இக்கரை என்கிற உலகத்திலிருந்து, அக்கரை என்கிற, தேவனுடன் வாழும் இடத்திற்கு சென்று விட்டனர்.நாமும்செல்லநம்மைதேவன்துரிதப்படுத்துகிறார்.

எபிரெயர் 11:13 முதல் 16 வரை வாசித்தால், பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் தங்களை புவியின் மேல் அந்நியரும், பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, தங்கள் சுயதேசத்திற்கு நாடிப்போனார்கள் என்று பார்க்கிறோம். நமது சுயதேசம் பரலோகம். நமது இலக்கு பரலோகமாக இருக்க நம்மை ஆயத்தப்படுத்த வேண்டும். பரலோகத்தையும், இயேசுவின் வருகையையும் நமது வாழ்வில் நிறுத்தி, அதுவே இலக்காகஎண்ணவேண்டும்.

இஸ்ரவேல் என்கிற தேவனுடைய 12 கோத்திரங்கள் செங்கடல் அடைந்தார்கள், வனாந்திர பயணம் செய்தார்கள், காடை, மன்னா. தண்ணீர், மேகஸ்தம்பம், அக்கினிஸ்தம்பம் இவைகள் எல்லாம் அனுபவித்தர்களில் அநேகர் யோர்தான் வரை வந்து, அங்கிருந்த செழிப்பைக் கண்டு அங்கேயே நின்று போனார்கள் (எண். 32:1-5). ரூபன், காத், மனாசேயின் பாதிகோத்திரத்தில் நின்று விட்டார்கள். இந்த அனுபவத்திற்குள் வந்தபின், கர்த்தர் நமக்கு எல்லா ஆசீர்வாதங்களையும் தருவார். நீ ஒரு ஆபிரகாமாக இருந்தால் உனக்கு வெள்ளியும், பொன்னும் தருவார். நீ ஒரு ஈசாக்காய் இருந்தால் உனக்கு 100 மடங்கு ஆசீர்வாதத்தைத் தருவார். நீ ஓர் ரெபெக்காளாய்இருந்தால்,நீகோடாகோடியாய்ப்பெருகும்படிஆசீர்வதிப்பார்.ஆனால் இதுதான் நமது இலக்கு அல்ல, (1கொரிந்தியர் 15:19) ஒருவன் இம்மைக்காக மாத்திரம் கிறிஸ்தவனாகவோ, கிறிஸ்துவை உடையவனாகவோ இருந்தால் எல்லா மக்களைக் காட்டிலும் பரிதவிக்கப்பட்டவனாய் இருப்பான் என்று பார்க்கிறோம். அழிந்து போகிற போஜனத்துக்காக அல்ல! (யோவான் 6:27) நித்திய ஜீவனுக்காக தெரிந்துகொள்ளப் பட்டிருக்கிறோம். இப்படி இருக்க (2 பேதுரு 2:21) அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்தபின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப் பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும் என்று வாசிக்கிறோமே. அக்கரை செல்வதற்கான வழிகளை இங்கு காணலாம்.

### விசுவாச வாழ்க்கை:

அன்பானவர்களே, நமது தேவை முக்கியமானதல்ல, நமது இலக்கே முக்கியமானது. எனவே அக்கரை என்கிற பரலோகம், அக்கரை என்கிற கானான்,

அக்கரை என்கிற பரம தேசத்திற்கு எப்படி போக முடியும்? கிறிஸ்தவ வாழ்க்கை ஒரு விசுவாசப் பயணம். ஒவ்வொன்றுக்கும் ஒரு வழி இருக்கிறது என்று அறிகிறோம் (நீதிமொழிகள் 30:19). கழுகுக்கு வழி ஆகாயத்திலும், பாம்புக்கு வழி கன்மலையிலும், கப்பலுக்கு வழி கடலிலும் உண்டு. எனவே கிறிஸ்தவம் ஆகாயத்துக்கு செல்லும் மார்க்கம். இது கன்மலையாம் கிறிஸ்துவின் மார்க்கம். இது கடலின் மார்க்கம். இயேசு சீஷர்களை படகில் ஏறி தமக்கு முன்னே அக்கரை செல்ல சொன்னார். இந்த படகு எதைக்காட்டுகிறது? (1தீமோத்தேயு 1:19) விசுவாசமாகிய கப்பல்-நமது விசுவாச பயணம் மூலமே அக்கரை செல்லமுடியும்.

விசுவாசம் எல்லாரிடத்திலும் இல்லை. நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை, நீங்களே சோதித்து அறியுங்கள். (2கொரிந்தியர் 13:5) என்று வேதம் சொல்லுகிறது. தோமாவைப் பார்த்து, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார். விசுவாசம் இல்லாமல் யாரும் பரலோகம் செல்ல முடியாது. விசுவாசம் இல்லாமல் எதையும் தேவனிடம் பெற்றுக்கொள்ள முடியாது. (எபிரெயர் 11:6, 2 தெசலோனிக்கேயர் 3:2). விசுவாசம் எல்லாரிடத்திலுமில்லையே (மத்தேயு 14:31). விசுவாசம் கிரியையில் இருக்க வேண்டும் என்று இயேசு எதிர்பார்த்தார். நமக்கு விசுவாசத்தில் உறுதி தேவை (யூதா 2). தாவீதை இக்கரைப்படுத்திக் கொண்டு வர ஒரு படகு (Boat-விசுவாசம்) வந்ததாகப்பார்க்கிறோம் (2 சாமுவேல் 19:15-18).

நமக்கு எல்லாம் இருக்கிறது, விசுவாசம் தான் இல்லை. எனவே எதையுமே இக்கரையிலிருந்து அக்கரைப்படுத்த முடியாமல் தவிக்கிறோம், பரலோகம் செல்ல விசுவாசம் தேவை, அற்புதம் செய்ய விசுவாசம் தேவை, பிசாசுகள் துரத்தப்பட விசுவாசம் தேவை. சபைக்கு விசுவாசம் தேவை. விசுவாச கப்பலின் வழியாகத்தான் அக்கரையாம் பரலோகிற்கு பயணம் செய்ய முடியும். எனவே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவி செய்யும் என்று கேட்போம். தேவனே என் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணும் என்று மன்றாடுவோம். விசுவாச வாழ்வில் திருப்தியடைவோம்.

## தீர்மானமுள்ள வாழ்க்கை:

இஸ்ரவேலர் யோர்தான் மட்டும் வந்து, அதைக் கடந்துபோகுமுன்னே அங்கே இராத்தங்கினார்கள் (யோசுவா 3:1, 14-17). இங்கே அக்கரை செல்வதற்கு தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியும், ஆசாரியர்களும் தேவைப்பட்டது. இன்று நமக்குத் ஆசாரியர்கள் அல்ல, உடன்படிக்கைப்பெட்டியை உடைய ஆசாரியர்கள் தேவை. இன்று நமக்கு ஏபோத்தை உடைய ஆசாரியர்கள் தேவை. ஆசாரியர்கள் கால்பட்ட மாத்திரத்தில் தண்ணீர் குவியலாக நின்றது. ஜனங்கள் அக்கரைப்பட்டார்கள். தேசத்தில் ஆசாரியர்களுக்குப் பஞ்சமில்லை. ஆனால் பெட்டியையும், ஏபோத்தையும் உடைய ஆசாரியர்கள் உண்டா என்று பின்பற்றுவதில் கவனமாயிருங்கள் (1சாமுவேல் 23:6-10). அன்று ஆசாரியர்கள் பெட்டியை சுமந்து நின்றபோது ஜனங்கள் அக்கரைப்பட்டார்கள். இன்று நாமும் புதிய ஏற்பாட்டின்படி ஆசாரியசந்ததி, இது நமக்கும் பொருந்தும் (1பேதுரு 2:9).

## இந்த உடன்படிக்கைப்பெட்டி நமது வாழ்வில் எதைக் காட்டுகிறது?

1. யாத்திராகமம் 25:22-ன் படி இது சாட்சியின் பெட்டி என்று அழைக்கப்படுகிறது. நமது வாழ்க்கை வெளியே உள்ள மக்களுக்கு சாட்சியாக இருக்க வேண்டும் கிரேத்தா தீவாராகிய விசுவாசிகளைப்போல் நம் ஜீவியம் இருக்கக்கூடாது (தீத்து 1:12).

2. எண்.14:44–ன் படி இது உடன்படிக்கையின் பெட்டி. அதாவது பிரதிஷ்டையுள்ள, தீர்மானம் உள்ள வாழ்வைக் குறிக்கும். தானியேல் தன்னைத் தீட்டுப்படுத்த மாட்டேன் (தானியேல் 1:8), தாவீது என் வாய்மீறாது (சங்கீதம் 17:3); யோபு என் கண்களோடு உடன்படிக்கை செய்தேன் (31:1), யோவான் ஸ்நானன்–உடை, உணவு, வாழ்க்கையில் பிரதிஷ்டை (மத்தேயு3:4), நாம் நம்பியிருக்கும் நேசருக்கு ஒரு பிரதிஷ்டையான ஜீவியம் இருந்தது (உன்.5:9–16). எனவே பிரதிஷ்டை, சாட்சியான வாழ்வு வாழ்ந்தால் தான், இக்கரையிலிருந்து அக்கரையைக் கடக்க முடியும். தேவன் வைத்திருக்கும் கானானைக் காணமுடியும்.

## தேவ வைராக்கியமுள்ள வாழ்க்கை:

2 இராஜாக்கள் இரண்டாம் அதிகாரத்தில் எலியாவும், எலிசாவும் யோர்தானைக் கடக்க, சால்வையை பயன்படுத்தினார்கள் (2:1–14). இந்த சால்வை வைராக்கியத்தைக் காட்டுகிறது. அவர் வைராக்கியத்தை சால்வையாகப் போர்த்திக் கொண்டிருந்தார் (ஏசாயா 59:17). கிறிஸ்தவன் அல்லது தேவனுக்கு ஊழியம் செய்கிறவர்களுக்கு, தேவனின் மீதும், தேவனின் செயல்கள் மீதும் ஓர் வைராக்கியம் தேவைப்படுகிறது. நாம் ஒவ்வொருவரும் தேவனுக்காக வைராக்கியம் உள்ளவர்களாக வாழ வேண்டும், செயல்பட வேண்டும். வைராக்கியத்துடன் காரியங்களை சாதிக்க வேண்டும். உனக்கு முன்னே இருக்கும் இந்த யோர்தானைக் கடந்து தேவனின் மகிமையில் நீ பிரவேசிக்க, தேவனின் வல்லமையை வெளிக்காட்ட உனக்கு வைராக்கியம் உண்டா? (2இராஜாக்கள் 2:11,15) நமக்குத் தேவை மனுஷீக வைராக்கியமல்ல, தேவ வைராக்கியம். (கலாத்தியர்4:18) நல்விஷயத்தில் நமக்கு வைராக்கியம் தேவை. தேவ சக்தியை அழிக்க நினைக்கும் அந்நிய சக்திகளோடு உடன்பாடு செய்யாத வைராக்கியமுள்ள யெகூக்கள் இன்றைக்குத் தேவை (2 இராஜாக்கள் 9:16–24) யெகூ பாவிகளோடும், பாவத்தோடும் சமாதானம் செய்யாதவன். (நியாயாதிபதிகள் 5:18) செபுலோனும், நப்தலியும் போர்க்களத்து முனையிலே தங்கள் உயிரை எண்ணாமல் மரணத்துக்கு துணிந்து நின்றார்கள். கிதியோனின் காலத்தில் பயமும் திகிலும் உள்ளவன் ஓடிப்போகக்கடவன் என்றான். காரணம், தேவன் மேல் உள்ள வைராக்கியம் (நியாயாதிபதிகள்7:3). தாவீதோடு இருந்த ஒரு கூட்டம் காத்புத்திரர். யோர்தான் கரைபுரண்டு போகும் சமயத்தில், தாவீதின் மேல் உள்ள வைராக்கியத்தால் இங்கு படகு இல்லை ஆனால் நீந்தி அக்கரை சென்றார்கள் (1நாளாகமம்12:8–15). இதுஅவர்களின்வைராக்கியத்தைகாட்டுகிறது.

பவுலின் கப்பல் பயணத்தில், மரணம் நேரிடும் சமயத்திலும் ஒரு கூட்ட மக்கள் பலகைகளைப் பிடித்து, நீந்தி கரையேறினார்கள். இது வைராக்கியத்தைக் காட்டவில்லையா? (அப்போஸ்தலர் 27:43,44). தேவனும் சீயோனுக்காகவும், எருசலேமுக்காகவும் மகா வைராக்கியம் கொண்டிருக்கிறேன் (சகரியா 1:14), என் பரிசுத்த நாமத்துக்காக வைராக்கியமாயிருக்கிறேன் (எசேக்கியேல் 39:26) என்கிறார். எனவே நமக்கு முன்னே ஜீவியத்தில், ஊழியத்தில் தோற்றுப் போனவர்கள், விழுந்து போனவர்கள் உண்டு. அவர்களைப் பார்க்க தேவையில்லை. ஜெயித்தவர்களைப் பார், ஜெயமாய் ஓடி முடித்தவர்களைப் பார். எப்படியாவது அக்கரை செல்ல உனக்கு வைராக்கியம் தேவை. நீச்சல் அடித்து செல், நீந்தி கரை சேர், பரிசுத்த வாழ்வு செய்து கரை சேர், எலியாவின் தேவனை நோக்கிக் கூப்பிட்டுக்கொண்டே கரை சேர், நமக்கு முன்னே ஓடி முடித்தவர்கள் மாதிரியாக விட்டுப் போனதையே கையில் எடுத்து செயல்படுத்தி, கரை சேரப் பார். காலம் கடைசி, கர்த்தர் வருகிறார், பரலோகமே உன் அக்கரையாகஇருக்கட்டும்.

சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ



பெ. பெவிஸ்டன்
பரமன்குறிச்சி, நாசரேத் மண்டலம்

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை வாசகர்கள் அனைவருக்கும், குறிப்பாக இந்த பக்கத்தில் சொந்தங்களான அன்பு சிறுவர்கள் யாவருக்கும் இனிய கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்கள். கடந்த ஆண்டு முழுவதும் நம்மை கிருபையாய் பாதுகாத்து நடத்தி, ஒரு புதிய ஆண்டினை காணச்செய்த நம் தேவனுக்கு நன்றி கூறுவோமாக. கடந்த ஆண்டு முழுவதும் நமது பரிபூரண ஜீவன் இதழுக்கு வழங்கி வந்த மேலான ஆதரவை எண்ணி தேவனை துதிக்கிறோம். இந்த ஆண்டிலும் ஜெபத்தோடு இன்னும் சிறப்பாய் செய்ய தேவன் கிருபை தருவாராக.

இந்த மாத கதைக்குள் போகலாமா? வாங்க போகலாம்...

கப்பல் ஒன்று கடலில் வழி தவறி செல்லும்போது கஜா புயல் போன்ற ஒரு பெரிய புயலில் அந்த கப்பல் சிக்கி மூழ்கிவிடுகிறது. ஒரே ஒருவன் மட்டும் எப்படியோ தப்பி, அருகிலுள்ள தீவில் அவன் கரையேறுகிறான்.

“நன்றி இயேசப்பா, என் உயிர காப்பாத்துனீங்க. ஆனாலும் இங்கிருந்து எப்படியாவது என்னை தப்பிக்க வைத்துவிடுங்க. ஆள் ஆரவாரமற்ற இந்த தீவில் எத்தனை நாள் தான் இருப்பது? என் மனைவி, பிள்ளைகளை நான் பார்க்க வேண்டாமா?” என்று ஜெபித்தான். ஏதாவது ஒரு ரூபத்தில் தனக்கு உதவிக்கரம் நீளும் என எண்ணினான். ஆனால் எதுவும் உதவி கிடைத்தபாடில்லை. இப்படியே நாட்கள் ஓடுகின்றன. தன்னைக் காத்துக்கொள்ள, தீவில் கிடைத்த பொருட்கள் மற்றும் கப்பலின் உடைந்த பாகங்கள் இவற்றை கொண்டு ஒரு சிறிய குடிசை ஒன்றை கட்டுகிறான். இதில் கரை ஒதுங்கிய கப்பலில் இருந்த தனது பொருட்கள் மற்றும் உடமைகள் சிலவற்றை மட்டும் பத்திரப்படுத்தி, அவன் தங்கி வந்தான். இப்படியே சில நாட்கள் ஓடுகின்றன. ஆனால் இவன் ஜெபத்தினை மட்டும் விடவில்லை.

தேவன் ஏதாவது ஒரு ரூபத்தில் நமக்கு நிச்சயம் உதவுவார் என்று தன்னை தேற்றிக்கொண்டான். ஒருநாள் இவன் உணவு தேடுவதற்காக வெளியே சென்று விட்டு திரும்புகையில், அன்று கண்ட காட்சி அவனை திடுக்கிட வைத்தது. பட்ட காலிலே படும் என்பதுபோல, எது நடக்க கூடாதோ அது நடந்து விட்டது. இவன் தங்குவதுகென்று இருந்த அந்த ஒரே குடிசையும் வானுயுற எழும்பிய புகையுடன் தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தது. குடிசைக்குள் இருந்த உடைமைகள் அனைத்தும் தீக்கிரையாகியிருந்தன. அதைப் பார்த்த இவன் அலறித்துடித்தான். எல்லாம் போய்விட்டது. இவனிடமிருந்த மிச்ச மீதி பொருட்களும் அக்கினிக்கு இரையானது.

“இயேசப்பா, என்னை காப்பாற்றும்படி தானே உம்மிடம் மன்றாடினேன். நீர் என்னிடத்தில் இருப்பவற்றையும் பறித்துக்கொண்டீரே. இதுதான் உமது நீதியோ? உலகில் என்ன நடக்கிறது? இன்றைய தேதி என்ன? எதுவுமே அறியாத குருடனாக இருக்கிறேனே ” என்று கதறி அழுதான். மறுநாள் காலை கடற்கரையில் அனாதையாய் படுத்திருந்த இவனை ஒரு கப்பலின் சப்தம் எழுப்பியது. இவன் தீவை நோக்கி அது வந்து கொண்டிருந்தது. “அப்பாடா நல்ல வேலைக்கு ஒரு வழியாக இங்கிருந்து தப்பித்தோம். யாரோ நம்மை காப்பாற்ற வருகிறார்கள்” என்று உற்சாகத்தில் துள்ளி குதித்தான்.

கப்பல் சிப்பந்திகள் லைப் போட்டில் வந்து, இவனை Hai.. Wish You a Happy New Year 2019 என்று கூறி, அவனை அழைத்து சென்றார்கள். அவர்கள் கூறியதை வைத்து இன்று 2019 ஜனவரி 1 என்பதை அறிந்து கொண்டான். தான் இங்கே தீவில் சிக்கிக்கொண்டிருப்பது எப்படி தெரியும் என்று அவர்களிடம் கேட்டான். அதற்கு அவர்கள் பற்றி எரிந்து புகை எழும்பியதை பார்த்தோம். யாரோ தீவில் கரை ஒதுங்கி காப்பாற்ற வேண்டி சிக்னல் கொடுக்கிறார்கள் என்று நினைத்தோம் என்றார்கள் அவர்கள்.

அப்போதுதான் தேவன் இவனது குடிசையை எரித்த காரணம் புரிந்தது. புதிய ஆண்டையல்ல புதிய வாழ்வை தேவன் தந்திருக்கிறார் என்பதை உணர்ந்து தேவனுக்கு மனதார நன்றி சொன்னான். அந்த வழியில் கப்பல்கள் வருவது மிக மிக அரிதான நிலையில், குடிசை மட்டும் தீப்பிடித்து எரியவில்லை என்றால் தன் நிலை என்னவாகியிருக்கும் என்று அவனுக்கு புரிந்தது. அவசரப்பட்டு தேவனை நிந்தித்ததை நினைத்து வருத்தப்பட்டு, மன்னிப்பு கேட்டான்.

அன்பு தம்பி தங்காய்...... கஜா புயலின் அகோரம் பெருகியிருந்த காலகட்டத்தில் கற்பனையாக எழுதப்பட்ட ஒரு கதையாக இருந்தாலும், நாம் சிந்திக்க வேண்டிய யதார்த்தமான கதை. வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களில் நாம் இப்படித்தான் இயேசப்பாவை அவசரப்பட்டு தவறாக பேசிவிடுகிறோம். நம்மை காக்கவே அவர் ஒவ்வொரு கனமும் காத்திருக்கிறார். இந்த புதிய ஆண்டில் தேவன் நம்மை நடத்தும் சகல பாதைகளிலும் முறுமுறுப்பு இல்லாமல் மனரம்மியமாய் இருக்க தீர்மானம் பண்ணிக்கொள்ளுவோம். நம் வாழ்வில் வரும் சோதனைகள் நம்மை வீழ்த்துவதற்கானது அல்ல, அனைத்தும் நம்மை வேறொரு மிகப்பெரிய ஆபத்திலிருந்து காக்கவே என்று நாம் புரிந்து கொண்டால், எதைப்பற்றியும் அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை.

“அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூறுகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். ” (ரோமர் 8:25)

இந்த கதை பிரயோஜனமாயிருந்திருக்கும் என எண்ணுகிறேன். உங்களது தீர்மானங்களையும் கருத்துக்களையும் 97503 81784 எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள். அடுத்த இதழில் சந்திப்போம். இது உங்களுக்கு புதிய ஆண்டாக மட்டுமல்ல புது வாழ்வாக மாற வாழ்த்துகிறேன். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

---

## பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்

**" Tamil District Council of SIAG "**

என்ற பெயரில் காசோலை அல்லது DD எடுத்து
பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு சென்னையில் உள்ள
நமது பொருளாளர் அலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

The Treasurer,
Tamil District Council of SIAG, E-17, Anna Nagar, Chennai - 600 102



# அழைப்பை அடுத்து
(After Call)


Rev. R. நெல்சன் ஞானகுமார்
இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியங்கள்.
மூத்த போதகர், திருவண்ணாமலை ஏ.ஜி. சர்ச்.


முழு நேர ஊழிய அழைப்பைப் பெற்றவர்கள், அதற்கான நேரம் வரும் வரை பொறுமையாய் காத்திருந்து வல்லமையான ஊழியத்திற்கு உங்களை ஆயத்தப்படுத்துங்கள். உங்களை ஆயத்தப்படுத்தி வல்லமையான ஊழியம் செய்வதற்கு கீழ்க்கண்ட ஆலோசனைகள் பிரயோஜனமாயிருக்கும்.

**1. அவசரப்பட வேண்டாம் :**

சிலர் தங்களிடமிருக்கும் சில திறமைகள், கிருபைகள், வரங்களை வைத்து ஊழியத்திற்கு எல்லா தகுதியும் பெற்றுவிட்டதாக கருதி படிப்பை, வேலையை நிறுத்திவிட்டு ஊழியத்திற்கு வந்து விடுகிறார்கள். அப்படி வந்து பின்வாங்கிப் போனவர்கள் அநேகர். எலியா எடுத்துக்கொள்ளப்படும் வரை எலிசா அவரை பின்பற்றினான். சால்வை தானாகவே எலிசாவின் மேல் விழுந்தது. எலியாவின் தோளிலிருந்து எடுத்துக்கொள்ளவில்லை. (2 ராஜா. 2:13). எனவே வேளை வரும் வரை பொறுமையாய் காத்திருங்கள். மோசே 40 வருடம் காத்திருக்க வேண்டியதாயிற்று. யோசேப்பு 13 வருடம் காத்திருக்க வேண்டியதாயிற்று. பிரசங்கம் பண்ணும் திறமை இருப்பதோ, பாடல் ஆராதனை நடத்தும் திறமை இருப்பதோ முழு நேர ஊழியமாகாது. இன்னும் பல காரியங்கள் ஊழியத்தில் இருக்கிறது.

**2. அதிக தாமதமும் வேண்டாம் :**

சிலர் சரியான நேரத்தில் தீர்மானம் எடுக்காமல் தாமதித்து விடுவார்கள். வயது அதிகமாகி, ஒரு வேலைக்கு சேர்ந்து சம்பாதிக்கப் பழகிடுவார்கள். திருமணமும் ஒழுங்கு செய்ய வேண்டிய சூழ்நிலை வந்துவிடும். பின் முழு நேர ஊழியத்திற்கு வருவதற்கு யோசிப்பார்கள். எனவே அதிக கால தாமதம் செய்யாமல் சரியான நேரத்தில் சரியான தீர்மானத்தை எடுங்கள். லோத்துவும் அவன் குடும்பத்தாரும் தாமதித்தார்கள். எனவே ஆண்டவர் அவர்கள் கையைப் பிடித்து வெளியே கொண்டுபோய் விட வேண்டியதாயிற்று (ஆதி.19:16). சிலர் எதையெடுத்தாலும் தோல்வி, பிரச்சனைக்கு மேல் பிரச்சனை என்ற நிலை வந்தவுடன் தான் ஊழியத்திற்கு அர்ப்பணிப்பார்கள். நீங்கள் அப்படியிராமல் சரியான நேரத்தில் தீர்மானம் எடுங்கள்.

**3. தவறான நோக்கமும் வேண்டாம் :**

பணம் சம்பாதிப்பதற்காக, புகழ் பெறுவதற்காக, பிறருடைய மதிப்பை பெறுவதற்காக, வேறு வேலை கிடைக்காததினால் ஊழியத்தையாவது செய்வோம் என்ற தவறான நோக்கங்களுக்காக ஊழியத்திற்கு வரவே கூடாது. கேயாசி பணத்திற்காக நாகமானை தேடிப்போனான், குஷ்டரோகியாக மாறிப்போனான் (2 ராஜா.5:20). "ஊழியத்திற்கு போனால் பணம் கிடைக்கும்; ஆனால் ஒருபோதும் பணத்திற்காக ஊழியத்திற்கு போகக்கூடாது",

**4. தரிசனத்தைத் தெளிவுபடுத்துங்கள்** (ஆபகூக் 2:2,3)

"உங்களைக் கொண்டு கர்த்தர் என்னவெல்லாம் செய்ய விரும்புகிறாரோ, அதை உங்களைக் கொண்டே செய்து நிறைவேற்றுவதற்கு, உங்களுக்குள் ஆண்டவர் தரும் ஆசையே தரிசனமாகும்."

ஊழியத்திற்கு அழைக்கப்பட்டிருந்தாலும், எந்த விதமான ஊழியத்தை செய்வது, எங்கே ஊழியம் செய்வது, எப்போது ஊழியத்திற்குள் பிரவேசிப்பது என்பன போன்ற காரியங்களை தேவ சமூகத்தில் காத்திருந்து தெளிவுபடுத்துங்கள். தேவைப்படுமானால் அவ்வப்போது உபவாசத்தோடு ஜெபியுங்கள். ஊழியங்களிலே பல வகை உண்டு. உதாரணமாக, மேய்ப்பனின் ஊழியம், சுவிசேஷ ஊழியம், தீர்க்கதரிசன ஊழியம், அப்போஸ்தல ஊழியம், போதக ஊழியம், மிஷனரி ஊழியம், வாலிபர் ஊழியம் மற்றும் சிறுவர் ஊழியம்... போன்ற பல ஊழியங்களில் உங்களைக் குறித்த தேவ திட்டம் என்ன என்பதை உறுதிப்படுத்துங்கள் (பிலி. 3:12). உங்களைக் கொண்டு ஆண்டவர் என்ன செய்ய விரும்புகிறாரோ அதைத்தான் நீங்கள் வெற்றியாய் செய்ய முடியும். அநேகர் தங்களைக் குறித்த தேவதிட்டம் அறியாமலே ஏதோ ஒரு ஊழியம் செய்து தங்கள் வாழ்க்கையையும் ஓடி முடித்து விடுகிறார்கள்.

## 5. உங்கள் போதகருக்கு ஊழியம் செய்யுங்கள்

எலிசா (1 ராஜா.19:21); யோசுவா (யோசுவா 1:1; யோசுவா 24:29)

உங்கள் போதகர் உங்களைவிட கல்வியறிவு குறைவானவராக, திறமை குறைவானவராக இருக்கலாம். சில நேரங்களில் உங்களிடம் இருக்கும் திறமையை, கிருபையை பார்த்து விசுவாசிகள், உங்கள் போதகரைவிட உங்களை அதிகமாய் பாராட்டலாம். ஆனாலும் உங்கள் போதகர் தேவனால் அபிஷேகம் பெற்றவர், உங்களை நடத்தும்படி நியமிக்கப்பட்டவர். எனவே அவரை அலட்சியப்படுத்தக் கூடாது. அவரை வேதனைப்படுத்தும்படி நடந்துகொள்ளக்கூடாது. போதகரைக் குறித்து தவறான செய்தியை பரப்புவது, சபையிலிருந்து ஆத்துமாக்களை வயப்படுத்தி தனி சபை ஆரம்பிப்பது போன்ற சாத்தானின் வேலையை செய்ய வேண்டாம். உங்களை அழைத்த ஆண்டவர் உங்களுக்கென ஒரு சிறப்பு ஊழியத்தை வைத்திருக்கிறார்.

நீங்கள் ஊழியத்திற்குள் பிரவேசிக்கும் வரை உங்கள் போதகர் கீழ் இருந்து அவர் சொல்லும் வேலை எதுவானலும் செய்யுங்கள். பாடல் பாடுவது, ஜெபம் நடத்துவது, பிரசங்கம் பண்ணுவது மட்டுமல்ல.... இன்னும் பல வேலைகளிலும் (சுத்தம் பண்ணுதல், வங்கி வேலை, ஒழுங்குபடுத்துதல்....) உங்களுக்கு அனுபவம் தேவை. எனவே எந்த வேலையானாலும் முகங்கோணாமல் செய்யுங்கள் (மத். 10:41,42).

## 6. கொடுக்கப்பட்ட பொறுப்பில் உண்மையாயிருங்கள்

(மத்.25:23; நீதி.28:20).

தற்சமயம் உங்கள் சபையில் கொடுக்கப்படுகிற பொறுப்பு எதுவோ அதை சந்தோஷமாய் செய்யுங்கள்; உண்மையாய் செய்யுங்கள்; நேர்த்தியாய் செய்யுங்கள் (பிர. 9:10).

போதகர் கண்களுக்கு மறைத்துவிடலாம். ஆனால் ஆண்டவனின் கண்களுக்கு மறைத்தவிட முடியாது. எனவே உங்களை நம்பி ஒருவேலை கொடுத்துவிட்டால், அதை எப்பாடு பட்டாகிலும் நேர்த்தியாய் செய்திடுங்கள். சில தியாகங்களை பண்ண தயங்காதிருங்கள். (தூக்கம், சாப்பாடு, அலைச்சல்).

## 7. ஜெபம், வேத வாசிப்பில் நேரத்தை முதலீடு செய்யுங்கள்

ஜெபம், வேதம் இது தான் ஊழியத்தின் வெற்றிக்கு திறவுகோல்கள். உங்களுக்கு எந்த திறமையும் இல்லாவிட்டாலும் இவைகள் இருந்தால் வெற்றி பெற்று விடலாம். ஆனால் எல்லா திறமையும் இருந்தும் இவைகள் இல்லாவிட்டால் செல்லாக்காசாக மாறிவிடுவீர்கள். எனவே உங்களுக்கு இருக்கும் திறமைகளோடு ஜெபமும், வேதமும் இருந்தால் பிரயோஜனமுள்ள பாத்திரமாக இருப்பீர்கள். வாரம் ஒரு நாள் உபவாசித்து விசேஷித்துக் கொண்டு உபவாசத்தோடு ஜெபியுங்கள். வரங்களுக்காக, கிருபைகளுக்காக, தரிசனத் தெளிவுக்காக, வழிநடத்துதலுக்காக ஜெபியுங்கள்.

இப்பொழுது நீங்கள் ஜெபம் பண்ணுவதை, வேதம் வாசிப்பதை வைத்து உங்கள் எதிர்காலத்தை நிர்ணயித்து விடலாம். உங்களுக்கு பெலனிருக்கும், நேரம் அதிகம் கிடைக்கும். இந்த நாட்களில் தான் அதிகம் உபவாசிக்க, ஜெபிக்க முடியும். வயதாகும்போது பெலன் குறைந்துவிடும். வேலை அதிகமாகிவிடும். எனவே காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள். (லூக்கா 6:12; 5:16; மல்கியா 2:7; IIதீமோ. 3:15).

## 8. திறமையை வளர்த்துக்கொள்ளுங்கள் (சங்கீதம் 78:72)

ஆண்டவர் அனுமதிக்கும் வரை தொடர்ந்து நன்றாக படியுங்கள். எந்த படிப்பானாலும் அது ஊழியத்திற்கு உதவும். ஆண்டவர் ஒவ்வொருவரையும் ஒரு திறமையோடு தான் படைத்திருக்கிறார். உங்களுக்கு ஆண்டவர் கொடுத்திருக்கிற திறமைகளில் சிறப்புத் தேர்ச்சி அடைய பிரயாசப்படுங்கள், சம்பந்தப்பட்ட புத்தகங்கள் வாசியுங்கள். மேல் பயிற்சி எடுங்கள். மட்டுமல்லாது ஊழியத்திற்கு தேவையான கீழ்க்கண்ட சில அடிப்படையான திறமைகளை ஓரளவாவது வளர்த்துக்கொள்ளுங்கள். மோசே (அப்போஸ்தலர் 7:22).

இசை, பிறமொழிகள் (ஆங்கிலம், இந்தி), வாகனங்கள் ஓட்டுதல், நீச்சல், சமையல், முதலுதவி, பாட்டு, ஆராதனை நடத்துதல், பிரசங்கம் பண்ணுதல், கணினி உபயோகித்தல், ஜெபம் நடத்துதல், சுவிசேஷம் சொல்லுதல், சாட்சி சொல்லுதல், நிர்வாகத்திறன், மொழிபெயர்ப்பு.

## 9. வேதாகமக் கல்லூரியில் சேர்ந்து பயிற்சி பெறுங்கள்

நம் ஸ்தாபனத்திலுள்ள வேதாகமக் கல்லூரிகளை கீழே தருகிறேன். இதில் எது உங்களுக்கு வசதிப்படுமோ, அதில் சேர்ந்து பயிற்சி பெறுங்கள்.

1. தமிழ்நாடு வேதாகமக் கல்லூரி, மதுரை (TBC)
2. மெட்ராஸ் வேதாகமக் கல்லூரி, சென்னை (MABC)
3. திரித்துவ வேதாகமக் கல்லூரி, கே. பி வலசை (பெண்களுக்கு மட்டும்)
4. ஆன்டியாக் பைபிள் செமினரி, பாண்டிச்சேரி
5. தென் ஆசிய வேதாகமக் கல்லூரி, பெங்களூர்
6. சென்ட்ரல் வேதாகமக் கல்லூரி, டெல்லி

## 10. தரிசனத்துக்கேற்ற வாழ்க்கைத் துணைத் தெரிந்தெடுங்கள்

உங்களுக்கு வரப்போகும் வாழ்க்கைத் துணை இரட்சிக்கப்பட்டவராக, ஊழியத்திற்கு அர்ப்பணித்தவராக இருந்தால் மட்டும் போதாது, உங்கள் தரிசனத்திற்கு ஒத்த தரிசனம் உடையவரா என்ற கேள்வியை கேட்டுப் பார்ப்பது நல்லது, இல்லாவிட்டால் உங்கள் தரிசனத்தை நிறைவேற்றுவது கடினமாகிவிடும்.



# பயப்படாதே; அவள் (சிறுபிள்ளை) இரட்சிக்கப்படுவாள்

**Rev. பெகின் சாமுவேல்** (AGCM Director)

ஆண்டவரும், அருமை இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பரிபூரண ஜீவன் வாசகர்களாகிய உங்களனைவருக்கும் தமிழ்ப் பிரதேச சிறுவர் ஊழியங்களின் சார்பில் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த வருடம் முழுவதும் தேவன் நம் சிறுவர் ஊழியங்கள் மூலம் பெரிய காரியங்களைச் செய்தார். 2018 ம் ஆண்டு வாக்குத்தத்தத்தின்படியே தேவன் அநேக சிறுபிள்ளைகளை இரட்சித்தார். திட்டமிட்ட எல்லா இலக்குகளையும் தேவன் முடிக்க செய்தார். தேவனுக்கே சகல துதியும், கனமும், மகிமையும் உண்டாவதாக. இந்த ஊழியங்களில் எங்களோடு ஒத்துழைக்கிற, ஜெபிக்கிற, கொடுக்கிற உங்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து AGCM ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

இந்த புதிய வருடத்திலும் தேவன் நம் சிறுவர் ஊழியங்களுக்காக பிரத்யேகமாக கொடுத்த வாக்குத்தத்தத்தை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்த ஆண்டுக்கான வாக்குத்தத்தம், பயப்படாதே, ... அவள் இரட்சிக்கப்படுவாள் (லூக் 8.50). இந்த சம்பவம் நாம் அனைவரும் அறிந்ததே. மரித்துப்போன யவீருவின் மகளான சிறுபெண்ணை இயேசு உயிரோடு எழுப்பின சம்பவம் தான் அது. இந்த வாக்குத்தத்தத்தின்படி, இவ்வாண்டில் மரித்துக் கொண்டிருக்கிற அநேக சிறுபிள்ளைகளை கர்த்தர் இரட்சிக்கப்போகிறார் என்று தீர்க்கதரிசனமாக கூறுகிறேன். நாம் செய்ய வேண்டிய சில காரியங்களை இச்சம்பவத்திலிருந்து தியானிப்போம்.

### 1. பயப்படாதேயுங்கள்

இயேசு கிறிஸ்து மரித்துக் கொண்டிருக்கும் யவீருவின் மகளை சுகமாக்க யவீருவுடன் சென்று கொண்டிருக்கும்போது, ஒரு அதிர்ச்சியான செய்தி வருகிறது. அதென்னவென்றால், அந்தப் பிள்ளை மரித்துப் போனாள் என்பதே. இதைக்கேட்ட தகப்பனாகிய யவீரு இயேசு தன்னோடிருக்கிறதை மறந்து இனி பிள்ளையைக் காப்பாற்ற வழியில்லையென்று பயந்தான். இந்த நேரத்தில் இயேசு யவீருவைப் பார்த்து சொல்கிறார் 'பயப்படாதே' . அன்பான வாசகர்களே, இந்த நாட்களில் சிறுவர்களுக்கு எதிராக பல கொடுமைகள் நடக்கின்றன. பாலியல் பலாத்காரங்கள், கடத்தல், சிறுவர்களுக்கெதிரான பல சித்ரவதைகளைக் குறித்து கேள்விப்படுகிற நாமும் இனி இந்தியாவின் சிறுவர்களைக் காப்பாற்றவே முடியாது என்று பயந்து கொண்டிருக்கிறோம். நம்மைப் பார்த்துதான் 'பயப்படாதே'. என இயேசு சொல்கிறார் . உயிரோடு எழுப்ப வல்லமை மிக்க இயேசு நம்மோடு இருக்கிறார். எனவே நாம் பயப்பட வேண்டிய அவசியமில்லை.

### 2. விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்

பிள்ளை மரித்துப் போய் விட்டது, இனி நம்பிக்கைக்கு இடமில்லை என்றாலும், தொடர்ந்து இயேசு சொன்ன இரண்டாவது வார்த்தை 'விசுவாசமுள்ளவனாயிரு' என்பதே. நம்முடைய விசுவாசத்தை தளர்த்திவிட நம்மை சுற்றி இருக்கிற

சூழ்நிலைகளுக்கு இடமளிக்காதீர்கள். உங்கள் பிள்ளைகளைக் குறித்த காரியத்தில் இயேசுவின் மேல் முழு நம்பிக்கையாயிருங்கள். இந்நாட்களில் பிள்ளைகளுக்கு எதிராக நடக்கிற காரியங்கள் அவர்கள் மரித்து விட்டார்கள், இனி பிழைக்க மாட்டார்கள் என்ற அச்சத்தை தருவது போல் இருக்கிறது. ஆனால் இவ்வாண்டில் கர்த்தர் நம்மைப் பார்த்து, இனிதான் சிறுவர் ஊழியத்தில் எழுப்புதலான பெரிய காரியங்களை செய்ய போகிறேன் என்று விசுவாசியுங்கள் என்று கூறுகிறார். உங்கள் பிள்ளைகளைக் குறித்த காரியத்தில் முழு விசுவாசமும் தேவன் மேல் இருக்கட்டும். உங்கள் பிள்ளைகளின் வாழ்க்கையில் எந்த பகுதி மரித்துப் போயிருக்கிறது? இந்த ஆண்டில் தேவன் அதை உயிர் பெறச் செய்வார். விசுவாசியுங்கள். இயேசு "பிள்ளை நித்திரையாயிருக்கிறது" என்று சொல்கிறார். ஏனெனில் செத்துப்போனதை நித்திரையாயிருக்கிறதாய் பார்த்தார். மரித்துப்போயிருக்கிற பிள்ளைகளை நித்திரையாயிருக்கிறவர்களாய் விசுவாசத்தோடு பாருங்கள்.

### 3. உயிரோடு எழுப்புங்கள்

இயேசு கிறிஸ்து செய்த மிக முக்கியமான காரியத்தை இங்கு பார்க்கிறோம். உன் பிள்ளை உயிரடைவாள் என்று சொல்லி யவீருவை அனுப்பிவிடவில்லை. யவீருவின் வீட்டிற்கு சென்று பிள்ளையின் கரத்தைப் பிடித்து தூக்கி விட்டார். ஏற்கனவே நித்திரையாயிருக்கிறாள் என்று விசுவாசிக்க சொன்ன ஆண்டவர் நித்திரையாயிருக்கிற பிள்ளையை தூக்கிவிடுவது போல இந்தப்பிள்ளையை தூக்கிவிட்டார். பாவத்தில் மரித்துப் போய் அநேக சிறுவர்கள் இருக்கிறார்கள். அவர்களை அதிலிருந்து தூக்கிவிட யாரும் முன்வருவதில்லை. அவர்களைத் தேடி செல்வோம். பாவ சேற்றில் இருக்கிற பிள்ளைகளைத் தூக்கி விடுவோம். நிச்சயம் அவர்கள் உயிரடைவார்கள்.

### 4. போஜனங்கொடுங்கள்

அடுத்ததாக, உயிரோடு எழுப்பின இயேசு பிள்ளைக்கு போஜனங்கொடுக்க சொல்கிறார். இயேசு செய்த அற்புதங்களில் எங்குமே போஜனங்கொடுங்கள் என்று குறிப்பிடப்படவில்லை. ஆனால் இந்த அற்புதம் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு இடங்களிலும் போஜனங்கொடுங்கள் என்ற வார்த்தையை நாம் வாசிக்கிறோம். ஏனெனில், இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்பது நாம் அறிந்ததே. அதன்படி, ஒரு சிறு பிள்ளையை நாம் போஷிப்பதின் மூலம் அநேகம் பேர் போஷிக்கப்படுகின்றனர். மத் 14ம் அதிகாரத்தில் ஒரு சம்பவத்தை பார்க்கிறோம். ஒரு சிறு பையனுக்கு அவன் தாய் 5 அப்பங்கள் 2 மீன்கள் கொடுத்து அனுப்பினார்கள். அந்த இடத்தில் எத்தனையோ பேர் ஆகாரம் வைத்திருந்திருக்கலாம். ஆனால் அதனால் ஒரு ஆசீர்வாதத்தையும் யாரும் அடையவில்லை. ஆனால் இந்த சிறுபிள்ளையின் கையிலிருந்த சொற்ப ஆகாரத்தைக் கொண்டு அநேகம் பேர் போஷிக்கப்பட்டனர். 5 அப்பங்கள் 2 மீன்கள் கொண்டு வந்த பையன் மூலம் ஸ்திரீகளும், பிள்ளைகளும் தவிர புருஷர்கள் ஏறக்குறைய 5000 பேர் திருப்தியாய் சாப்பிட்டார்கள். புல.4:4-ல் "பிள்ளைகள் அப்பங்கேட்கிறார்கள். அவர்களுக்கு கொடுப்பாரில்லை" என்று வாசிக்கிறோம். இன்றும் இதே நிலைதான் காணப்படுகிறது. சிறுவர்களை கவனிப்பாரில்லை. பெரியவர்களைக் குறித்த காரியத்திற்கே சபைகளில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. ஜீவ அப்பத்தை நம்மை சுற்றி உள்ள சிறுவர்களுக்கு இந்த வருடத்தில் கொடுக்க தீர்மானிப்போம். அவர்களைத் தேடி சென்று கிறிஸ்துவின் அன்பை அறிவித்திட நாம் முன்வருவோம். கர்த்தர் தாமே இந்த வருட வாக்குத்தத்தத்தின்படி அநேக சிறுவர்களை இரட்சிப்பாராக. இந்த ஆண்டு சிறுவர்களின் மத்தியில் ஒரு எழுப்புதலின் ஆண்டு என்று பிரகடனம் பண்ணுகிறேன். தேவ கிருபை உங்களனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.

## SFC வட இந்திய மற்றும் அண்டை நாடுகள் மாணவர் முகாம்கள் 2018

| வ. எண் | இடம் | மாணவர்கள் | இரட்சிப்பு | ஞானஸ்நானம் | அபிஷேகம் | ஊழியம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | ராஞ்சி, ஜார்க்கண்ட் | 150 | 70 | 40 | 10 | 25 |
| 2. | சகாரன்பூர், உத்திரபிரதேஷ் | 75 | 45 | 25 | 10 | |
| 3. | ஒரிசா | 180 | | | 30 | 12 |
| 4. | கேத்தல், ஹரியானா | 120 | | | 16 | 30 |
| 5. | மஹிந்திரா நகர், நேபாள் | 500 | | 40 | 100 | 35 |
| 6. | பரிதாபாத், ஹரியானா | 82 | 30 | 18 | 15 | 33 |
| 7. | ஜெய்கோன், மே. வங்கம் | 180 | | | 18 | 37 |
| 8. | திம்பு, பூட்டான் | 22 | | | 10 | 10 |
| 9. | முங்கேர், பீகார் | 73 | 37 | | 22 | 12 |
| 10. | நவாப்பூர், மஹாராஸ்டிரா | 150 | 40 | 2 | 10 | |
| | | 1532 | 342 | 125 | 241 | 194 |

இந்த வருடத்தில் கர்த்தருடைய கிருபையினாலே வட இந்தியாவில் 8 மாணவர் முகாம்களும், அண்டை நாடுகளில் 2 முகாமும் நடத்த ஆண்டவர் உதவி செய்தார். குறிப்பாக முதன் முறையாக பூட்டான் தேசத்திலே மூன்று நாட்கள் மாணவர் முகாம் நடத்த ஆண்டவர் உதவி செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக. எங்களோடு வந்து ஊழியம் செய்த, கொடுத்த மற்றும் ஜெபித்த ஊழியர்கள் அனைவருக்கும் எங்களது நன்றியை தெரிவிக்கிறோம்.

சாட்சி : “நான் 23 வருடங்களாக ஊழியம் செய்கிறேன். ஆனால் இதுபோல நல்ல வேதாகம போதனைகளடங்கிய ஒரு மாணவர் முகாமை நான் பார்த்ததில்லை. எங்கள் பிள்ளைகள் மாற்றமடைந்திருக்கிறார்கள். அடுத்த வருடம் முகாம் நடத்துவதற்கான தேதியை இப்போதே கொடுங்கள்”. (பாஸ்டர் சுனில் பாரிக், பல்லாப்கார்ப், பரிதாபாத், ஹரியானா)

நன்றி : நெல்சன் ஞானகுமார்
கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியம்

---

2019 **ஜனவரி 14,15,16**
(திங்கள், செவ்வாய், புதன்)
**மத்திய வாலிபர் முகாம்**
மதுரை

2019 **ஜனவரி 26**
(சனிக்கிழமை)
**மண்டல உபவாச நாள்**
அந்தந்த மண்டலங்களில்

# the HEALTHY church

*The churches throughout all Judea, Galilee, and Samaria had peace and were edified. And walking in the fear of the Lord and in the comfort of the Holy Spirit, they were multiplied (Acts 9:31).*

Throughout history, Christians have looked to the church in the Book of Acts as a model of what Christ wants in His body. Our verse in Acts 9:31 sets forth 5 evidences of a healthy church.

**1. CLIMATE OF PEACE.**

Notice that the verse begins with the word then. The context of this verse is the conversion of Saul and the resulting decrease of external persecution on the church. However, peace involves much more than the absence of persecution. A church can have peace outwardly and not inwardly. Peace involves absence of conflict, both outwardly and inwardly, and the presence of harmony. A church filled with division will not see multiplication. The climate of peace naturally produces an atmosphere of unity. Are you helping to unify your congregation, or do you create divisions?

**2. CONSISTENT SPIRITUAL GROWTH.**

Notice the verse says, ''and were edified.'' Edify here literally means ''to build a house,'' referring to us, the household of God! It's a reference to spiritual growth. A healthy church is one blossoming with spiritual growth in its members. We grow spiritually through spiritual food and spiritual exercise. Our spiritual food is the regular intake of God's Word, and our spiritual exercise is our ministry and service. If you are going to grow spiritually, it will cost you time and effort (see Col. 2:6, 7).

**3. COMPELLING SPIRITUAL VITALITY.**

Acts 9:31 tells us the New Testament church was ''walking . . . in the comfort of the Holy Spirit.'' This church was alive! A clear spiritual dynamic was at work! Distinct characteristics identify a dynamic church. The church must live by faith (Heb. 11:6; 2 Cor. 5:7). The church must commit to holiness (Eph. 4:30). The church must depend on prayer (Eph. 6:18). Without these components, our church would be dead! Are we making progress in these areas?

**4. CONSISTENT NUMERICAL GROWTH.**

The New Testament church was multiplied. A healthy church will

experience consistent numerical growth. Not numbers for numbers' sake, but because numbers represent people and people matter to God! We need to reach people for Christ! A healthy church is a church where lives are changed by the gospel, a church that sees consistent numerical growth. Now there are settings where a church is reaching people and not growing numerically. In areas of rapidly declining population, a church may reach many for Christ and not see a numerical increase. For most churches, however, this is simply not the case.

**5. CONSUMING GOD FOCUS.**

A key phrase in our verse is ''walking in the fear of the Lord.'' Walking involves a way of life. The fear of the Lord portrays an idea of being afraid to offend God in any way. A healthy church seeks God's will above all else. A church that pleases God is a church where the people honour Christ in their daily conduct, in their thoughts (Phil. 4:8), deeds (2 Cor. 7:1), and words (Eph. 4:29).

In the face of all the problems in the church, we can become part of the solution. We need to follow the model of the New Testament church, cultivating the lifestyle of peace, spiritual growth and vitality, numerical growth, and godliness. Will you commit yourself to help build that type of church here? It has been said there are three kinds of people: those who make it happen, those who watch it happen, and those who wonder what happened. Will you commit to be a part of that first group, those who make it happen?


தமிழ் பிரதேச அசெம்பிளிஸ் ஆஃப் காட்

வழங்கும்




தமிழன்

பாருங்கள்! பயனடையுங்கள் !!

தொலைக்காட்சியில்

வியாழக்கிழமை தோறும் காலை 7.30 மணி முதல் 8.00 மணி வரை

Contact : Rev. I. Christudas, Director, Department of Evangelism & Church Planting
Hope A.G. Church, No.1, Dr. Radhakrishnan St., Pallikaranai, Chennai - 100. Cell: 98412 98009

## போட்டி எண் : 74 (சரியான விடைகள்)

(1). வேதம்; (2). நீதிமானை; (3). வானங்களையும், பூமியையும்; (4). உத்தமர்களின்; (5). பயத்துடனே; (6). ஆத்தும மீட்பு; (7). தீமை; (8). அக்கினி ஜுவாலைகளை; (9). சாந்தகுணமுள்ளவர்கள்; (10). அந்நிய தேவனை, நாடிப் பின்பற்றுகிறவர்களுக்கு; (11). துன்மார்க்கன்; (12). எந்த மனுஷனும் மாயையே; (13). அவருக்குப் பயந்தவர்களிடத்தில்; (14). அவரை நம்புகிற ஒருவன்மேலும்; (15). செம்மையானவர்களுக்கு; (16). பாவியின்மேல்; (17). நீதிமானைப் பகைக்கிறவர்கள்; (18). கர்த்தருடைய வசனம்; (19). உண்மையுள்ளவர்கள்; (20). நீதியை, அக்கிரமத்தை; (21). சிறுமைப்பட்டவனுக்கு; (22). மதகுகளின் இரைச்சலால் ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது. (23). துன்மார்க்கனுக்கு; (24). மரணபரியந்தம்; (25). 6 முறை;

---

## போட்டி எண் : 74 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை :** கனகவல்லி; T.கலா; ரோஸ்லின்; K.விஜி; S.முத்துலட்சுமி; மாது; S.ஜெயா; G.முத்துலெட்சுமி; S.கலா; சுமதி; T.சாந்தி; K.புஷ்பவல்லி; K.மஞ்சு; மரகதம்; A.மஞ்சு; கந்தையா; மாரிமுத்து; கிரிஜா; பியூலா; K.மகேஸ்வரி; | **ஸ்ரீவில்லிபுத்தூர்** : பாஞ்சாலி; தேவபிரியா; ஜெயராணி; ஹெப்சிபா; சித்ரகலா; அனிதா; அபிநயா; மெசி; கிறிஸ்டிபிரியா; சாரோன்; மத்தேயு; கிரேஸி; மகதலேனா மரியாள்; | **ஆலங்குளம்** : ஸ்டெல்லா; ஜெயபாரதி; பிளாரன்ஸ்; லதா; ரோஸ்லின்; பெர்சியாள்; உமா ரோஸ்லின்; | **கொட்டாங்குளம்** : ஜெபமேரி; ஏஞ்சல்ராணி; ரக்ஷனா; ஜான்சிராணி; ரெஜினா; | **வடக்கு ஆத்தூர்** : தங்கம்; அன்னக்கொடி; பியூலா; ரைமன்ராஜ்; டேவிஷா; ரெமல்டா; | **எடப்பாடி** : எப்சிபா; மாலதி; லீதியாள்; வனிதா; **நாசரேத்** : தாஸ்மோசஸ், பரிபூரணம்; மெர்சி; **வந்தவாசி** : அபிஷா சுமதி; ஜுலியட்; விஜயா; | **கடையநல்லூர்** : தங்கராஜ்; நளினி; செல்வி இந்திராணி; **அந்தமான்** : விஜய்; கெத்சியாள்; ஜேக்லின் | **திருநின்றவூர்** : கேத்ரின்; ஏஞ்சலின்; தெரசா சுரேஷ் | **கிச்சிப்பாளையம்** : ராணி; சாரோன் ஜெயரூபி; | **சென்னை** : நர்மதா தேவி; மெர்லின் ஹெலன் பிரீத்தியா; | **சாத்தூர்** : சரோஜா; சங்கீதா; | **திருக்கூர்** : செலின் சாராள்; கீதா; **திருவள்ளார்** : மினி வசந்தம்; | **ஆறுமுகநேரி** : பிரேமா | **தெற்கு ஆத்தூர்** :பால்கனி ராம்கி; | **திருநெல்வேலி** : மெரில் அலிஸ்; | **கோவை புதூர்** : சலோமி; | **நெய்வேலி** : பிரியா; ஜோஷ்வா ராஜ்;| **திருச்சி** : மேரி சுஜாதா; | **நாகமலை** ; விஜிலா; **பழனி** :சாந்தி; | **சாயர்புரம்** : தேன்மொழி; | **மேதவாக்கம்** : பியூலா; | **குரோம்பேட்டை** : ஜோதி; | **இறச்சகுளம்** : ஜேஸ்மின்; **ஜலகண்டபுரம்** : சங்கீதா; | **அச்சிறுபாக்கம்** : டாரத்தி; | **பேயன்விளை** : பானுமதி; | **சிட்லபாக்கம்** : ரெபாக்கா;| **விழுப்புரம்** : ஆன்ட்ரூ; | **அம்பாசமுத்திரம்** : லீலா; | **இடையர்பாளையம்** : லூர்துமேரி; **விருத்தாசலம்** : சுகிர்தா; | **கடாட்சபுரம்** :ரேவதி ; |**தென்னூர்** : கிருஷ்டி மகாலெட்சுமி; |**பெங்களூர்** : தேவபிரியா; ; | **கடலையூர்** : ஆபிரகாம்; ; | **ஆழ்வார்குறிச்சி** : தெபொராள்; ; |**முத்தையாபுரம்** : மங்களம்; ; | **வளையபட்டி** : ஜாயல் , பெர்சிஸ்; | **மண்ணூர்** : ஆரோன்; ; | **வில்லியனூர்** ; புரோனிக்கா; ; | **கொங்கந்தான்பாறை** : சந்திரா; ; | **வத்ராப்** : அருள்செல்வி; ; | **திண்டிவனம்** : சாராள் அறிவுசெல்வி; ; | **திசையன்விளை** : ஜெயசீலி; ; | **திருப்பூர்** : வசந்தகுமாரி; ; | **மடத்துக்குளம்** : பிரித்தி; ; | **கோவை** :கிறிஸ்டினா அபிகாயில்; ; | **ஆப்பக்கூடல்** : சந்தரகுமாரி; ; |**உடுமலைபேட்டை** : வசந்தி.

# பரிபூரண ஜீவன் போட்டி எண் – 75

சங்கீதம் (51-100) அதிகாரங்கள் இருப்பிடத்துடன் விடை எழுதவும்.

1. அவன் --------- யுத்தம்.
2. தேவ பர்வதம் --------- பர்வதம் போலிருக்கிறது.
3. --------- தேவனென்று அறியுங்கள்.
4. கடலை உலர்ந்த --------- மாற்றினார்.
5. கிழக்கிலும், மேற்கிலும், வனாந்தர திசையிலுமிருந்து --------- வராது.
6. முதிர்வயதிலும் கனி தந்து --------- பசுமையுமாயிருப்பார்கள்.
7. மனுஷனுடைய --------- உமது மகிமையை விளங்கப்பண்ணும்.
8. --------- கர்த்தருக்குள் மகிழ்ந்து அவரை நம்புவான்.
9. தேவனாகிய கர்த்தர் ---------, ---------
10. நிலத்துக்கு எருவாய்ப்போன ---------, ---------
11. ஒரு --------- எங்கள் வருஷங்களைக் கழித்துப்போட்டோம்.
12. என் --------- ஆண்டவரைத் தேடினேன்.
13. தேவனுக்கேற்கும் பலிகள் ---------
14. எனக்கோ --------- நலம்.
15. என் உதடுகள் விளம்பினதை --------- இருப்பேன்.
16. --------- என்மேல் விழுந்தது.
17. --------- பேசுகிறவர்களின் வாய் அடைக்கப்படும்.
18. --------- உம்முடைய --------- போதிக்கிற மனுஷன் ---------
19. கர்த்தரின் --------- பர்வதங்கள் --------- உருகிற்று.
20. அநேகருக்கு நான் ஒரு --------- போலானேன்.
21. --------- பிரியப்படுகிற ஜனங்களை சிதறடிப்பார்.
22. கர்த்தர் --------- பெரியவர்.
23. --------- தண்ணீர்களிடத்தில் உன்னைச் --------- அறிந்தேன்.
24. நான் --------- நாளில் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன்.
25. --------- விஷத்திற்கு ஒப்பான --------- அவர்களில் இருக்கிறது.

| | |
|---|---|
| விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 05.02.2019 | சரியான விடை எழுதி அனுப்புகிறவர்கள் தங்கள் முழு முகவரியுடன் விடையை எழுதி அனுப்பவும். |



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**


**"பரிபூரண ஜீவன்"**

**Sis.சாந்தி பால், W/o. Rev. பால் பிரகாசம்**

A.G. Church, 23- மெயின்ரோடு,செங்கோட்டை - 627 809

செல்: 88077 18002

## வட இந்திய மிஷனரி பயணங்கள்










## வட இந்திய, அண்டை நாடு SFC முகாம்கள்














Registered News Paper Regd. No. 8206 / 62




ஆண்கள் ஐக்கிய முகாம் – அந்தமான்







BOOK POST

If Undelivered please return to

**PARIPOORANA JEEVAN**

30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 2301165